குறுந்தொகை கதைகள் எழுபத்தைந்து

மு. சுயம்புலிங்கம்

M S R கிரியேஷன் வெளியீடு

நூல் விபரப் பட்டியல்

தலைப்பு : குறுந்தொகை கதைகள் எழுபத்தைந்து
ஆசிரியர் : **மு. சுயம்புலிங்கம்**
உரிமை : ஆசிரியர்க்கு
முதல் பதிப்பு : 2025
மொழி : தமிழ்
கணிணி வியாழம் கணிணி அச்சகம்.
அச்சாக்கம் : காரணைப்புதுச்சேரி-603 202.
வெளியீடு : **M S R** கிரியேஷன்
பிளாட் நம்பர்: 2,3 (வெஸ்டர்ன் பார்ட்)
பாலாஜி நகர் மெயின் ரோடு
ஸ்ரீ பாலாஜி நகர் புதுப்பெருங்களத்தூர்
சென்னை - 600 063.
மு. சு. ரிஷி Ph : 9840370200
மு. சுயம்புலிங்கம் Ph : 9003196380

Kurunthogai Kathaigal Ezhupathainthu

Subject : Tamil Literature Stories From Kurunthogai.
Author : M. Suyambulingam
Language : Tamil
Edition : First
Size of Book : Demy 1x8
Point Size : 12
No. of Pages : 124
No. of Copies : 100
Type & Design : Jupitar DTP 9962241090
Printer : Kabali Press. Ch-91.
Publisher : **M S R CREATION**
Chennai - 600 063.

Price : 90/-

ஆசிரியர் உரை

11, ஏப்ரல், 2025. பங்குனி 28.

"குறுந்தொகை" சங்க இலக்கியத்தில். எட்டுத் தொகையில், இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

இந்தக் குறுந்தொகை புத்தகத்தில் நானூறு பாட்டுக்கள் இருக்கிறது. தமிழ் அறிஞர் ச. வே. சுப்ரமணியம் அவர்கள் இந்த நானூறு பாட்டுக்களுக்கும் உரை எழுதியிருக்கிறார்.

இந்த நானூறு பாட்டுக்களில் இருந்து இந்த சுயம்புலிங்கம் எழுபத்தைந்து கதைகள் எழுதி இருக்கிறான்.

இந்த எழுபத்தைந்து கதைகளும் மிகச்சிறந்த கதைகள்.

இந்தப் பெரிய உலகத்தில், வாழும் மக்கள் எல்லோரும், இந்த எழுபத்தைந்து கதைகளையும் விரும்பிப் படிப்பார்கள் என்று என் உள்மனசு சொல்லுகிறது.

பாசத்துடன்

மு. சுயம்புலிங்கம்

11-04-2025.

உ

வாழ்த்துரை

அவரை நான் இதுவரை கண்டதில்லை. இருந்தும், காண ஆசை....இரு கையும் கூப்பி, திருப்பாதத்தைப் போற்றி வாழ்க தமிழ்..! வளர்க மெய்ஞானம்..! நல்லதே நடக்கும்.

மேற்சொன்னது போல, நான் இப்பிறவியில் நான் காண ஆசை கொள்ளும் ஒருவரில் திருவுடையான் சுயம்புலிங்கம் அவர்களைக் காண ஆவா.

ஆம். என்ன எளிமை.! என்ன யதார்த்தம்.! என்ன உண்மை.! என்ன அன்பு.! என்ன எடுத்துக்காட்டு.! என்ன தொடர்மை.!..என எண்ணிலடங்கா உயர்திணைப் பண்பு களைத் தன்னகத்தே வைத்து இத் தரணியும் சிறக்க தன் யதார்த்த தமிழ் நடையில் பலப்பல கதைகளையும், பலப்பல அர்த்தங்களையும் சிறப்பு நூலில், தன் சார்பு அழகான எண்ணங்களை வடிவமைத்து வருகிறார்.

இந்த அரிய சேவை புவியில் இப்போது தேவை..! அவரின் அன்பு மகன் ரிஷி, அவருக்கான திருமேடையில் குறுந்தொகை நூலில் அவர் தன்பால் பார்த்து உணர்ந்த கதைகளை வடிவமைத்து வெளியிட உள்ளார் என்ற செய்தி கேட்டு அகமகிழ்ந்தேன். அக்கதைகளைப் படித்து மகிழ்ச்சி கொண்டேன். சின்னஞ்சிறு உயிர் முதல் அவர் மனதில் வைத்து பார்க்கும் கதாபாத்திரங்களைக் கண்டு மெய் சிலிர்த்தேன்.

இப்புவியை, அவர் பார்க்கும் பார்வை, எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. வாழ்க அவர் தொண்டு..! வாழ்க அவர் குடும் பத்தார்..! வாழ்க தமிழ் அடியார்களெல்லாம்..! வாழ்க தமிழ்..! என்றும் புதியது தமிழ்..!

இங்ஙனம்
ஸ்ரீ மகா லட்சுமி நரசிம்ம சுவாமிகள்,
இந்தியா.

1. அத்திப் பழம்
பரணர்.

2. எங்கள் திருமணத்திற்குக் கண்கண்ட சாட்சி
ஒருத்தரும் இல்லை.
கபிலர்.

3. தூதுவன்
படுமரத்து மோசி கீரனார்.

4. அப்பொழுதான் பிறந்த ஒரு பச்சைக் கொடி
பரணர்.

5. மனைவி மேல் பாசமுள்ள ஒரு கணவன்
பாலை பாடிய பெருங்கடுங்கோ.

6. முட்டை
கபிலர்

7. அணில்
அணிலாடு முன்றிலார்.

8. பெரிய மிருகங்களும் பயப்படுகிறது
மீன் எறி தூண்டிலார்.

9. என் நெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருப்பவள்
சிறைக்குடி ஆந்தையார்.

10. காதல் பறவைகள்
சிறைக்குடி ஆந்தையார்.

11. காவல்
வெள்ளி வீதியார்.

12. வெறுங்கை
பரணர்

13. கன்றுக் குட்டி
கருவூர்க் கதப்பிள்ளை.

14. ரசனை
அள்ளூர் நன்முல்லையார்

15. கணவனை இழந்த ஒரு பெண்
கடுந்தோட்கர வீரனார்.

16. ஒரு பெண் புறா
குடவாயில் கீர்த்தனார்.

17. ஊர்க்குருவி
வடம வண்ணக்கண் தாமோதரனார்.

18. ஈ
வெண்கொற்றனார்.

19. பலாப்பழம்
மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்.

20. பாவப்பட்ட ஒரு பறவை
தாமோதரனார்.

21. ஒரு சிறிய விவசாயி
கபிலர்.

22. நாரை
வாயிலான் தேவனார்.

23. ஒரு ஓலைப் பூ சேவல்
மதுரைக் கண்ணனார்.

24. ஒரு மரம்
ஆலந்தூர் கிழார்.

25. களிமண்
மாதிரத்தனார்.

26. உயிர்மேல் அவ்வளவு ஆசை
குன்றியனார்.

27. தப்புக் கணக்கு
கபிலர்.

28. வயோதிகம்
அம்மூவனார்

29. ஒரு கெண்டை மீன்
ஓரம் போகியார்.

30. தொண்டி
பரணர்.

31. வெள்ளி வீதி
வெள்ளி வீதியார்.

32. தாயைத் தேடிக் கொண்டிருக்கிறது ஒரு கன்றுக் குட்டி
சிறைக்குடி ஆந்தையார்.

33. இரண்டாவது மகசூல்
உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

34. உன் கணவர் நல்லவர்
பாலை பாடிய பெருங்கடுங்கோ.

35. காமம்
மிளைப் பெருங் கந்தனார்.

36. இது எங்கள் வீடு
கொல்லன் அழிசி

37. ஒரு தாய்க் கோழி
ஒக்கூர் மாசாத்தியார்.

38. இரவு வேண்டாம்
மதுரை பெருங் கொல்லனார்.

39. ஏரிக்கரை
வெள்ளி வீதியார்.

40. காதலன் மார்பில் படுத்திருக்கிறாள் ஒரு பெண்
மாலூர் கிழார்

41. வங்கா..என்று ஒரு பறவை
தூங்கலோசிரியார்.

42. தாயில்லாத ஒரு முட்டை
கிளிமங்கலங்கிழார்.

43. பயமில்லை
கபிலர்

44. அலை அலையாக மிதந்து கொண்டிருக்கிறது கானல்
மதுரை சீத்தலைச் சாத்தனார்.

45. மந்திரங்களால் காம நோயைத் தீர்த்து வைக்க முடியாது.
பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்.

46. தூரம்.
அல்லூர் நன்முல்லையார்.

47. இமய மலையால் கூட நிமிர்ந்து நிற்க முடியாது.
அவ்வை.

48. விவரம் இல்லாத பெற்றோர்கள்.
வடம வண்ணக்கண் பேரி சாத்தனார்

49. அன்றில் பறவைகள்.
மதுரை மருதன் இளநாகனார்.

50. மகளே.
நக்கீரனார்.

51. இது எங்கள் நிலம்.
கருவூர்ப் பவுத்திரனார்.

52. கடலே..நீயுமா..
அம்மூவனார்.

53. விவரமில்லாத ஒரு பெண்.
மாங்குடி மருதனார்.

54. கடல் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.
கூடலூரர் கிழார்.

55. தயிர்ச் சோறு.
கூடலூரார்க் கிழார்.

56. பிச்சிப்பூ.
சிறை க்குடி ஆந்தையார்.

57. தந்தம்.
வெள்ளி வீதியார்.

58. நீர் நாய்.
பூங்கண்ணுத்திரையார்.

59. ஊரு ஊருக்கு ஒரு கொல்லுப் பட்டறை.
கச்சிப்பேட்டு நன்நாகையார்.

60. வெடி.
வெண்பூதியார்.

61. தேனீக்கள்.
உலோச்சனார்.

62. கலங்கிய நெஞ்சம்.
வருமுலையாரித்தியார்.

63. பெலக்குறைவு.
நெடும்பள்ளியத்தையார்.

64. தாகம்.
நெடும்பள்ளியத்தையார்.

65. மலை உச்சியில் இருக்கிறது எங்கள் ஊர்.
குட்டுவன் கண்ணனார்.

66. பாசம்.
கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்.

67. பசு.
கூவன் மைந்தன்.

68. அலை.
செய்தி வள்ளுவன் பெருஞ் சாத்தனார்.

69. ஊழ்.
மோதாசனார்.

70. பாவி.
பரணர்.

71. பசி.
கடம்பனூரர் சாண்டிலியனார்.

72. காவல்காரன்.
காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்.

73. கட்டில்.
பேயனார்.

74. பட்டமரம்.
ஔவையார்.

75. மேகங்கள் முழங்குகிறது.
கயமனார்.

" அத்திப்பழம் "

ஒரு ஆறு.

அந்த ஆற்றங்கரையில் ஒரு அத்திமரம் இருக்கிறது.

அந்த அத்தி மரம் பழுத்திருக்கிறது.

அந்த அத்தி மரத்தில் இருந்து ஒரு பழம் கீழே விழுந்து கெடக்கிறது.

அந்த அத்திப் பழத்தைப் பார்த்த ஒரு நண்டு அதைத் தின்பதற்காக வந்திருக்கிறது.

ஒரு நண்டு, ரெண்டு நண்டு என்று ஒரு ஒரு நண்டாக வந்து வந்து ஏகப் பட்ட நண்டுகள் அந்த ஒரு அத்திப் பழத்தை மிதித்துக் கொண்டு இருக்கிறது.

அத்திப் பழம் இயல்பாகவே மென்மையானது.

கீழே விழுந்து கெடக்கிற அந்த அத்திப் பழம் நன்றாகக் கனியப் பழுத்திருக்கிறது.

அந்த அத்திப் பழத்தை மொய்த்திருக்கிற அந்த நண்டுகள் மிதித்து மிதித்து அந்த அத்திப் பழம் நசுங்கி ஒண்ணுக்கும் ஆகாமல் ஆகிவிட்டது.

பரணர்.
குறுந்தொகை. 24.

" எங்கள் திருமணத்திற்குக் கண்கண்ட சாட்சி ஒருத்தரும் இல்லை. "

நான் என் காதலனை விரும்பிக் காதலித்தேன்.

என் காதலனும் என்னை விரும்பிக் காதலித்தான்.

ஒரு நாள் நாங்கள் இரண்டு பேரும் மாலை மாற்றித் திருமணம் செய்து கொண்டோம்.

நாங்கள் மாலை மாற்றித் திருமணம் செய்து கொண்ட போது எங்கள் திருமணத்தை நேரில் பார்த்த மனிதப்பய சாட்சிகள் யாரும் இல்லை.

எங்கள் ஊர் கடல்கரைச் சோலைக்குப் பக்கத்தில் உள்ள ஆற்றாங்கரையில் நாங்கள் இருவரும் மாலை மாற்றித் திருமணம் செய்தோம்.

நாங்கள் இருவரும் மாலை மாற்றித் திருமணம் செய்து கொண்டபோது ஆற்றில் ஒரு நாரை மட்டும் நின்று கொண் டிருந்தது. அந்த நாரையின் கால்கள் தினைத் தட்டையைப் போல் இருந்தது. அந்த நாரை ஆற்றில் ஓடுகிற தண்ணீரில் "ஆறல் " மீன் வருகிறதா என்று அது குனிந்த தலை நிமிராமல் இரை தேடிக்ககொண்டிருந்தது.

நாங்கள் இரண்டு பேரும் மாலை மாற்றித் திருமணம் செய்து கொண்டதை அந்த நாரை கூட பார்த்திருக்க வாய்ப் பில்லை.

என்னை என் கணவர் ஏமாற்றி விட்டு இப்போது என்னை விட்டுப் பிரிந்து போய்விட்டார்.

கபிலர்
குறுந்தொகை. 25.

" தூதுவன் "

தோழி..

நம்ம அரண்மனைக்கு வந்திருக்கிற இந்தத் தூது வனைப் பார்..

இவன் வெளியூர்க்காரன்..இவன், பிச்சைச் சோறு சாப்பிடுகிற ஒரு ஏழைப் பாணன் வீட்டில் பிறந்த ஒரு ஏழைப் பையன். இவன், நல்ல உணவு கிடைக்காமல் உடல் வளர்ச்சி அடையாமல் எலும்பும் தோலுமாக இருக்கிறான். இவன் வயதைப் பார்க்கும் பொழுது இவன் நிச்சயமாகப் படித்துக் கொண்டிருக்கிற ஒரு இளம் மாணவன்.

இந்த இளம் மாணவன் நம்மிடம் எவ்வளவு அறி வோடு பேசுகிறான்..

நம் தலைவன் இந்த இளம் அறிவாளியைத் தேர்ந் தெடுத்து இவனை நம்மிடம் தூது அனுப்பியிருக்கிறான்.

இந்த இளம் மாணவன் சிறந்த அறிவாளி.

இந்த இளம் மாணவன் மிகச் சிறந்த சான்றோன்.

தோழி..

நாம் நம் அரண்மனையில் இந்த இளம் அறிவாளிக்கு மிகச் சிறந்த விருந்து கொடுப்போம்.

படுமரத்து மோசி கீரனார்.
குறுந்தொகை. 33.

"அப்பொழுதுதான் பிறந்த ஒரு பச்சைக் கொடி "

ஒரு பெரிய மலைக் காடு.

அந்தப் பெரிய மலைக்காட்டில் பெரிய பெரிய குண்டுக் கற்கள் ஏராளமாக இருக்கிறது. அந்தக் குண்டுக் கற்கள் அங்கே பெரிய பெரிய யானைகள் படுத்துக் கிடப்பதைப் போல் இருக்கிறது.

யானை மாதிரியே இருக்கிற அந்தக் குண்டுக் கற்களுக்கு மத்தியில் நெசமான ஒரு யானையும் அங்கே படுத்து உறங்கிக் கொண்டு இருக்கிறது.

உறங்கிக் கொண்டிருக்கிற அந்த நெசமான யானைக்குப் பக்கத்தில் "மானை" என்று சொல்லப்படுகிற ஒரு பச்சைக் கொடி கொழு கொழு என்று செழிப்பாக வளர்ந்திருக்கிறது.

அப்பொழுதான் பிறந்த அந்தப் பச்சைக் கொடி படுத்து உறங்கிக் கொண்டிருக்கிற அந்த நெசமான யானை மேல் கொடி வீசிப் படர்ந்து கொண்டிருக்கிறது.

நெசமான அந்த யானை உறக்கம் கலைந்ததும் அது எழுந்து போய்விட்டது.

நெசமான யானைமேல் கொடி வீசிப் படர்ந்து கொண்டிருந்த அந்தப் பச்சைக் கொடி பற்றிக் கொள்வதற்கு

துணையில்லாமல் அது வெறுந் தரையில் கிடக்கிறது.

பரணர்.
குறுந்தொகை. *36.*

" மனைவிமேல் பாசமுள்ள ஒரு கணவன் "

ஒரு பெரிய பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் ஒரு யாம் மரம் இருக்கிறது.

இரண்டு யானைகள் அந்த மரத்துக்கு ஓடி ஓடி வந்து கொண்டிருக்கிறது. பசியோடும், தாகத்தோடும் அந்த யானைகள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆண் யானை தன்னுடைய பெரிய தும்பிக்கையால் அந்த மரத்தின் கிளைகளை ஒடிக்கிறது.

அந்த ஆண் யானை தன்னுடைய பெரிய தும்பிக் கையால் அந்த மரத்தின் பட்டைகளை உரிக்கிறது.

அந்தப் பெரிய யாம் மரத்தின் பட்டைகளிலிருந்து சொளு சொளுன்னு தண்ணீர் வடிகிறது.

ஆண் யானை பசியோடும் தாகத்தோடும் இருந் தாலும் அது தன் பசியையும், தாகத்தையும் பொறுத்துக் கொண்டு அது அந்த யாம் மரத்தின் பட்டைகளை உரித்து உரித்து மனைவிக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.
குறுந்தொகை. *37.*

" முட்டை "

ஒரு மலைக்காடு.

அந்தப் பெரிய மலைக் காட்டில் ஒரு சிறிய குன்று.

அந்தச் சிறிய குன்றில் ஒரு சிறிய பொந்து இருக்கிறது.

அந்தச் சிறிய பொந்தில் ஒரு மயில் முட்டையிட்டிருக்கிறது.

அந்த மயில் அந்த முட்டைகளை அடைகாத்துக் கொண்டிருந்தது.

முட்டைகளை அடைகாத்துக் கொண்டிருந்த அந்தப் பெண் மயில் காலார நடப்பதற்காக அது வெளியே நடைப் பயிற்சிக்குப் போயிருந்தது.

அது ஒரு பகல் நேரம்

நல்ல வெயில்.

அந்தச் சிறிய குன்றுக்கு ஒரு சிறிய குரங்குக் குட்டி வருகிறது. அந்தக் குரங்குக் குட்டியின் முகம் கன்னங் கரேர் என்று இருக்கிறது.

குரங்குக் குட்டி மயில் முட்டைகளைப் பார்க்கிறது.

அது விளையாடுவதற்காக அந்த முட்டைகளில் ஒன்றை வெளியே எடுத்துக் கொண்டு வருகிறது.

அந்தக் குரங்குக் குட்டி அந்த முட்டையைப் பாறைகளில் உருட்டி உருட்டி விளையாடிக் கொண்டிருக்கிறது.

குரங்குக் குட்டி பாறைமேல் உருட்டி, உருட்டி

விளையாடிக் கொண்டிருக்கிற அந்த முட்டையில் உயிருள்ள அழகான ஒரு மயில் குஞ்சு இருக்கிறது.

கபிலர்.

குறுந்தொகை. 38.

" அணில் "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் ஒரு சிறிய கிராமம்.

அந்தக் கிராமத்தில் மக்கள் நடமாட்டமே இல்லை.

அந்தக் கிராம மக்கள் தங்களுடைய சொந்தக் கிராமத்தில் பிழைக்க வழி இல்லாததால் அந்த மக்கள் பஞ்சம் பிழைக்கப் போய் விட்டார்கள்.

ஒரு வீடு, அந்தக் கிராமத்தை விட்டுத் தள்ளி தனியாக இருக்கிறது. அந்த வீட்டில் ஆளில்லை. ஆளில்லாத அந்த வீடு ஆள் இல்லாமல் பாழடைந்திருக்கிறது.

தனியாக இருக்கிற அந்தச் சிறிய வீட்டின் முற்றத்தில் அணில்கள் பயமில்லாமல் விளையாடிக் கொண்டிருக் கின்றன.

அணிலாடு முன்றிலார்.
குறுந்தொகை. 41.

"பெரிய மிருகங்களும் பயப்படுகிறது "

ஒரு பெரிய மலைக்காடு.

அந்த மலைக்காட்டில் ஒரு பக்கம் மூங்கில் மரங்கள் செழிப்பாக வளர்ந்திருக்கிறது. அந்த மூங்கில் காட்டுக்கு ஒரு யானை வந்திருக்கிறது. அந்த யானை மூங்கில் இலைகளைத் தின்று பசியாறுவதற்காக அது ஒரு உயரமான மூங்கில் மரத்தைப் பிடித்து வளைக்கிறது.

அந்தப் பெரிய மலைக்காட்டில் ஒரு பக்கம் தினை விதைத்திருக்கிறது. தினைப் பயிர்கள் செழிப்பாக வளர்ந்தி ருக்கிறது. ஒரு காவல்காரன் தினைப்பயிர்களைக் காவல் காத்துக் கொண்டு இருக்கிறான். அந்தக் காவல்காரன் அந்த யானையைக் குறிவைத்துத் தெறிக்கிறான். அவன் கவணில் இருந்து புறப்பட்ட ஒரு கல் வேகமாக இரைச்சல் போட்டுக் கொண்டு போகிறது.

காற்றைக் கிழித்துக் கொண்டு இரைச்சல் போட்டுக் கொண்டு வருகிற கவண் கல்லின் சத்தத்தை அந்த யானை கேட்கிறது. அது பயந்து விட்டது. பயத்தில் அது வளைத்துப் பிடித்திருந்த உயரமான மூங்கில் மரத்தை விட்டு விட்டது.

மீன் எறி தூண்டிலார்.
குறுந்தொகை. 54.

"என் நெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருப்பவள்"

என்னவள் இன்று என்னோடு வருகிறேன் என்று சொன்னாள்.

அவளை நான்தான் அழைத்துக் கொண்டு வர வில்லை.இந்தப் பாலைவனத்தில் தாகத்துக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை.

இந்தப் பெரிய பாலைவனத்தில் நரிகள் தோண்டிய ஒரு சிறிய ஊற்றில் கொஞ்சம் தண்ணீர் கிடந்தது. நரிகள் குடித்தது போக மிஞ்சிய எச்சித் தண்ணீர் அது. அந்த எச்சித் தண்ணீ ரையும் காய்ந்த சருகுகள் மூடிக் கொண்டிருந்தது. அந்தக் காய்ந்த சருகுகள் அந்த எச்சித் தண்ணீரில் அழுகி நாறிக் கொண்டிருந்தது.

குடிப்பதற்குத் தகுதி இல்லாத இந்தத் தண்ணீரை நான் குடித்தேன்.

குடிப்பதற்குத் தகுதி இல்லாத இந்தத் தண்ணீரை என்னவளும் குடிக்க வேண்டுமா.?

என்னவளின் அழகான கைகளால் தொட்டுப் பார்ப் பதற்குக் கூட தகுதியில்லாத தண்ணீர் இது.

என் நெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருக்கிற என்ன வளை இன்று நான் என்னோடு

அழைத்துக் கொண்டு வராதது நல்லதுதான்.

சிறைக்குடி ஆந்தையார்.
குறுந்தொகை. 56.

"காதல் பறவைகள்"

எங்கள் ஊரில் ஒரு குளம் இருக்கிறது. இரண்டு காதல் பறவைகள் அந்தக் குளத்தில் ஆனந்தமாக நீந்திக் கொண் டிருக்கின்றன.

ஆனந்தமாக நீந்திக் கொண்டிருக்கிற அந்தக் காதல் பறவைகளுக்கு முன்னால் ஒரு தாமரைப் பூ அழகாகப் பூத்துக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெண் பறவையின் கணவன் கொஞ்சம் அவளை முந்திப் போகிறான்.

அவர்களை அந்தத் தாமரைப் பூ பிரிக்கிறது.

அந்தப் பெண் பறவை கணவனைத் தேடுகிறது.

அவள் கண்ணுக்கு அவள் கணவன் தென்பட வில்லை.

அவளை விட கொஞ்சம் முன்னால் போன அவள் கணவனை, அந்தத் தாமரைப் பூ அவள் கண்ணுக்குத் தெரியாதபடி மறைத்துக் கொண்டிருந்தது.

அது கொஞ்ச நேரந்தான்

அந்தக் கொஞ்சம் நேரத்தில் அந்தப் பெண் பறவை அவள் கணவனைக் காணாமல் பதறித் துடித்துப் போய் விட்டது.

சிறைக்குடி ஆந்தையார்.
குறுந்தொகை.57.

"காவல்"

அழகான ஒரு மலைக்கிராமம்.

அந்தக் கிராமத்தில் ஒரு பெரிய பாறை இருக்கிறது.

அந்தப் பாறையில் பசு வெண்ணை குவித்து வைக்கப் பட்டிருக்கிறது.

ஒரு இளைஞன் அந்த வெண்ணையைக் காவல் காத்துக் கொண்டிருக்கிறான்.

பொழுது கிழக்கேயிருந்து மேற்காமல் போய்க் கொண் டிருக்கிறது.

வெண்ணை வெயிலில் உருகி ஓடுகிறது.

காவலுக்கு உட்கார்ந்திருக்கிற அந்த இளைஞன், உருகி ஓடுகிற அந்த வெண்ணையை, அவன் இரண்டு கண்களாலும் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அந்த வெண்ணையைப் பாதுகாக்கவும், அந்த வெண்ணையைத் தின்று அனுபவிக்கவும் முடியாதபடி கடவுளால் அந்த இளைஞன் வஞ்சிக்கப் பட்டிருக்கிறான்.

அவன் பிறவியிலேயே ஊமை.

அவனுக்குப் பிறவியிலேயே இரண்டு கைகளும் இல்லை.

வெள்ளி வீதியார்.
குறுந்தொகை. 58.

"வெறுங்கை"

உயரமான ஒரு மலை.

அந்த மலையில் ஒரு பெரிய மரம்.

அந்த மரத்தில் ஒரு பெரிய தேன் கூடு இருக்கிறது.

மலை அடிவாரத்தில் ஒரு மனிதன் உட்கார்ந்து இருக்கிறான். அந்த மனிதன் அந்தப் பெரிய தேன் கூட்டை ஆசையோடு பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அந்தப் பெரிய தேன் கூட்டிலிருந்து தேன் கீழே வடியும் என்று அவன் கைகளை ஏந்திக் கொண்டு இருக்கிறான். தேன் கூட்டிலிருந்து ஒரு சொட்டுத் தேன் கூட கீழே வடியவில்லை.

அவன் தேன் கூட்டைப் பார்க்கிறான்..

அவன் வெறுங்கையை நக்குகிறான்.

அந்த மனிதன் அண்ணாந்து கொண்டு அந்தப் பெரிய தேன் கூட்டை ஆசையோடு பார்க்கிறான்..

அந்த மனிதன் அவனுடைய வெறுங்கைகளை ஆசையோடு நக்குகிறான்.

அந்த மனிதன் அதே இடத்தில் உட்கார்ந்திருக்கிறான். அவனால் எழுந்து நடக்க முடியாது.

"அவனால் எழுந்து உட்காரவும் முடியாது."

" அவனுக்கு கால்கள் இல்லை. "

பரணர்.

குறுந்தொகை.60.

" கன்றுக் குட்டி "

நாங்கள் ஒரு மாடு வளர்க்கிறோம்.

எங்கள் மாடு ஒரு கன்றுக் குட்டியை ஈன்றிருக்கிறது.

கன்றுக் குட்டி அழகாக இருக்கிறது.

கன்றுக் குட்டியின் கண்கள் மிகவும் அழகாக இருக்கிறது.

மாடு காட்டுக்கு மேயப் போயிருக்கிறது.

இது சாயங்கால நேரம். மாடு வீட்டுக்கு வரும் நேரம் இது.

மாடு இன்னும் வீட்டுக்கு வரவில்லை.

சாயங்காலம் ஆகியும் தாய் வராததால் தாயைக் காணாமல் கன்றுக் குட்டியின் முகம் வாடி விட்டது.

எங்கள் கன்றுக் குட்டி ஏக்கத்தோடு அது வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

கருவூர் கதப்பிள்ளை.
குறுந்தொகை. 64.

" ரசனை "

எங்கள் வீட்டில் ஒரு வேப்ப மரம் இருக்கிறது. இந்த வேப்ப மரத்தில் ஒரு கிளி உட்கார்ந்து இருக்கிறது. அந்தக் கிளி அதன் சிவந்த வாயில் தங்கக் காசு மாதிரியே இருக்கிற வேப்பம் பழத்தை வைத்துக் கொண்டு இருக்கிறது

என் மனைவி என் வீட்டில் உட்கார்ந்து இருக்கிறாள். அவள், அவள் நகங்களுக்குச் சிவப்புச் சாயம் பூசி இருக்கிறாள். அவள் அழகான ஒரு காசு மாலை கோர்த்துக் கொண்டிருக்கிறாள். அவள் அந்தக் காசு மாலையைக் கோர்ப்பதற்கு வேப்பம் பழம் மாதிரியே இருக்கிற தங்கக் காசுகளை அவள் கையில் வைத்திருக்கிறாள்.

நான்..

கிளி வாயில் இருக்கிற வேப்பம் பழத்தைப் பார்க்கிறேன்.

நான்..

என் மனைவியின் கையில் இருக்கிற தங்கக் காசையும் பார்க்கிறேன்.

என்ன அழகு..என்ன ஒற்றுமை..

நான் அழகான இந்த ஒற்றுமைகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறேன்.

அள்ளூர் நன்முல்லையார்.
குறுந்தொகை. 67.

"கணவனை இழந்த ஒரு பெண் "

உயரமான ஒரு மலை.

அந்த மலையில் உயரமான ஒரு பெரிய மரம்.

ஒரு ஆண் குரங்கு அந்த மரத்தில் தன் குடும்பத் தோடு வசித்து வந்தது. அந்த ஆண் குரங்கு மரத்தில் ஏறுவதிலும், கிளைக்கு கிளை தாவுவதிலும், அபாரமான திறமை பெற்றிருந்தது. அந்த ஆண் குரங்கின் கண்கள் நல்ல கருப்பாகவும், நல்ல அழகாகவும் இருந்தது. அந்த ஆண் குரங்கு தன் மனைவி மீதும், தன் பிள்ளை மீதும் அளவற்ற பாசம் வைத்திருந்தது.

ஒரு நாள் அந்த ஆண் குரங்கு அந்தப் பெரிய மரத்தில் ஒரு கிளையில் இருந்து இன்னொரு கிளைக்குத் தாவும் போது கீழே விழுந்து இறந்து விட்டது.

அந்தப் பெண் குரங்கு கணவன் இறந்த பிறகு உயிர் வாழ விரும்பவில்லை.

அந்தப் பெண் குரங்கு அது பெற்றெடுத்த ஒத்தைக்கு ஒரு செல்ல மகனை அதன் பெற்றோரிடம் ஒப்படைத்தது.

அன்றைய பகல் பொழுது கழிந்தது.

இரவு வந்தது.

நடுச்சாமமும் வந்தது.

சரியான இருட்டு.

அந்தப் பெண் குரங்கு உயரமான அந்த மலையிலிருந்து குதித்து அதன் உயிரைப் போக்கிக் கொண்டது.

கடுந்தோட் கரவீரனார்.
குறுந்தொகை.69.

" ஒரு பெண் புறா "

ஒரு பெரிய பாலைவனம்.

அந்தப் பெரிய பாலைவனத்தில். உயரமான ஒரு மரம் இருக்கிறது. அந்த மரத்துக்குப் பெயர் ஓமை மரம்.

இது கோடை காலம்,

இந்தக் கோடையில் இலைகளை எல்லாம் உதிர்த்து விட்டு அந்த ஓமை மரம் மொட்டையாக நின்று கொண்டிருக்கிறது. அந்த மரத்தின் அடித்தூரில் உள்ள பட்டைகளை யானைகள் தின்று விட்டன. காற்றுக்கு, அந்த ஓமை மரத்தின் காய்ந்த கொப்புகள் அசைந்து கொண்டிருக்கிறது.

ஒரு பெண் புறா. அந்த ஓமை மரத்தில் ஒரு கொப்பில் உக்காந்திருக்கிறது. இரை தேடப் போன அந்தப் பெண் புறாவின் கணவன் இன்னும் திரும்பி வராததால் அது தனிமையில் உக்காந்திருக்கிறது. அது வருத்தத்தோடு உக்காந்திருக்கிறது. அது அழுது அழுது. கணவனைக் கூப்பிடுகிற சோகமான குரல் அந்தப் பாலைவனத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறது.

குடவாயில் கீரத்தனார்.
குறுந்தொகை. 79.

" ஊர்க்குருவி "

ஒரு ஊர்க்குருவி.

அது ஒரு ஆண் குருவி.

அந்த ஆண் குருவி, ஒரு கரும்பின் பூமேல் உட்கார்ந்திருக்கிறது.

இந்த ஆண் குருவியின் மனைவி கர்ப்பமாக இருக்கிறது.

மனைவி முட்டை இடுவதற்கு ஒரு நல்ல கூடு வேண்டும். அந்தக் கூடு மெத்து மெத்து என்று மென்மையாக இருக்க வேண்டும்.

அந்த ஆண் குருவி தன் மனைவிக்கு மிருதுவான ஒரு கூடு கட்டுவதற்காக அது அந்தக் கரும்பின் பூவைத் தன் அலகால் கொத்தி எடுத்துக் கொண்டிருக்கிறது.

வடமவண்ணக்கண்தாமோதரனார்.
குறுந்தொகை.85.

"ஈ"

எங்கள் தொழுவில் எங்கள் காளை மாடு கெட்டிக் கெடக்கு.

எங்கள் காளை மாட்டின் அழகான கழுத்தில் ஒரு நல்ல வாரில் ஒரு சிறிய மணி கெட்டி இருக்கிறோம்.

மாட்டு ஈக்கள் இரைச்சல் போட்டுக் கொண்டு பறந்து வந்து எங்கள் காளை மாட்டைக் கடித்தக் கொண்டிருக்கிறது.

மாட்டு ஈக்களின் கடியைத் தாங்க முடியாமல் எங்கள் காளை மாடு தலையை வேகமாக அசைத்து அசைத்து அந்த ஈக்களை விரட்டுகிறது.

எங்கள் காளை மாடு தலையை அசைக்கிறபோது எங்கள் காளை மாட்டின் கழுத்து மணி மெல்லிய இசையை எழுப்புகிறது.

எங்கள் காளை மாட்டின் அந்த மெல்லிய மணி ஓசை எனக்கு மட்டும் கேட்கிறது.

நான் உறக்கம் வராமல் படுத்திருக்கிறேன்.

ஊர் உறங்குகிறது.

பனி பெய்து கொண்டிருக்கிறது.

குளிர்ந்த காற்று வாடையை அள்ளிக் கொண்டு வருகிறது.

இது நடுச்சாமம்.

நான் இப்போதுதான் திருமணம் ஆனவள். என் கணவர் என்னை விட்டு விட்டு அவர் மட்டும் தனியாக வெளிநாடு போயிருக்கிறார்.

நான் அழுது அழுது என் கண்கள் சிவந்து விட்டன. என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறது.

வெண்கொற்றனார்.
குறுந்தொகை.86.

" பலாப்பழம் "

மிளகுக் கொடிகள் பச்சைப் பசேலென்று விரிந்து படர்ந்திருக்கிற ஒரு மலை.

அந்த மலையில் ஒரு பலா மரம் இருக்கிறது.

அந்தப் பலா மரத்தில் பெரிய பெரிய பலாப் பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பழங்கள் மணமா மணக்கு.

ஒரு இரவு நேரம், அந்த மலைமேல் மேகங்கள் வந்து குவிகிறது.

மேகங்கள் முழங்குகின்றன.

மழை கொட்டு கொட்டு என்று கொட்டுகிறது.

பழுத்து மணம் வீசுகிற அந்தப் பலா மரத்தில் ஒரு ஆண் குரங்கு உக்காந்திருக்கிறது. அந்த ஆண் குரங்கின் அடர்த்தியான முடிகள் மழையில் நனைந்து குளிரில் சிலிர்த்துக் கொண்டிருக் கிறது.

அந்த ஆண் குரங்கு, அது தின்பதற்காக, பழுத்த ஒரு பலாப்பழத்தைக் கையில் எடுக்கிறது.

நன்றாகப் பழுத்து மணம் வீசுகிற அந்தப் பெரிய பலாப்பழம் குரங்கின் பிடியிலிருந்து தவறிக் கீழே விழுகிறது.

கீழே விழுந்த அந்தப் பெரிய பலாப்பழத்தை வெள்ளம் அடித்துக் கொண்டு போகிறது.

அந்தப் பெரிய பலாப் பழத்தை அருவியிலிருந்து ஓடுகிற ஒரு பெரிய ஓடை, ஊர்க் குளத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிறது.

பழுத்த அந்தப் பெரிய பலாப் பழத்தின் மணம் ஊரெல் லாம் மணக்கிறது.

மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்.
குறுந்தொகை.90.

" பாவப்பட்ட ஒரு பறவை "

ஒரு பறவை.

அது கிழக்கே இருந்து மேற்காமல் பறந்து போய்க் கொண்டு இருக்கிறது.

அந்தப் பறவை ரொம்பத் தூரத்தில் இருந்து வந்து கொண்டிருக்கிறது. அது இன்னும் ரொம்பத் தூரம் போக வேண்டும்.

அந்தப் பறவையின் கூடு மேற்கே ரொம்பத் தூரத்தில் இருக்கிறது. அங்கே அது உயரமான ஒரு கடம்ப மரத்தில் கூடு கட்டியிருக்கிறது. அந்தக் கூட்டில் அந்தப் பறவை குஞ்சு பொரித்திருக்கிறது.

அந்தப் பறவை தன் குஞ்சுகளுக்கு இரை ஊட்டு வதற்காக அது தன் வாயில் நெறையா இரை எடுத்துக் கொண்டு போகிறது.

பொழுது மறைந்து விட்டது.

நேரம் இருட்டிக் கொண்டு வருகிறது.

இந்தச் சிறிய பறவை இந்தப் பெரிய வானத்தில் வேகமாகப் பறந்து போய்க் கொண்டிருக்கிறது.

பாவம் அது இன்னும் ரொம்பத் தூரம் போக வேண்டும்.

தாமோதரனார்.
குறுந்தொகை.92.

" ஒரு சிறிய விவசாயி "

ஒரு சிறிய மலைக் கிராமம்.

அந்தக் கிராமத்தைச் சுற்றி காந்தள் செடிகள் உயிருள்ள வேலியாக, அந்தச் சிறிய கிராமத்துக்கு, பாதுகாப்பு அரணாக இருக்கிறது.

அந்தச் சிறிய கிராமத்தில் ஒரு சிறிய விவசாயி.

அந்தச் சிறிய விவசாயி அவர் வயலில் மலை நெல் விதைத்திருக்கிறார்.

நெல் பயிர் நன்றாக வளர்ந்திருக்கிறது.

அவர்கள் களை எடுக்கிறார்கள்.

அவர்கள் வயலில் பெரிய பெரிய இலைகளோடு மலை மல்லிகை மலர்ந்திருக்கிறது.அவர்கள் அதைப் புடுங்கி எறிகிறார்கள்.

களை எடுத்த நெல் பயிருக்கு விவசாயி அருவித் தண் ணீரைப் பாய்ச்சுகிறார்.

அந்தச் சிறிய விவசாயிக்கு அந்த வருசம் நல்ல வெள் ளாமை.

அந்தச் சிறிய விவசாயி அவருடைய சிறிய வயலில் நல்ல வெள்ளாமை எடுத்தாலும் வருசம் பூராவுக்கும் அந்த நெல் அவர்களுக்கு ஆண்டு வரவில்லை.

அந்தச் சிறிய விவசாயி வீட்டில் அடுப்பில் உலை ஏற வில்லை.

விவசாயி வீடு பட்டினியோடு இருக்கிறது.

அந்தச் சிறிய விவசாயி அரும்பாடு பட்டு அவர் யானைத் தந்தங்களைச் சேர்த்து வைத்திருந்தார்.

மிக உயர்ந்த மதிப்புள்ள அந்த யானைத் தந்தங்களை அந்தச் சிறிய விவசாயி குறைந்த விலைக்கு விற்பனை செய்தார். யானைத் தந்தங்களை விற்றுத்தான் அந்தக் குடும்பம் பசியாறியது.

கபிலர்.
குறுந்தொகை.100.

"நாரை"

ஒரு ஆறு.

அந்த ஆற்றின் கரையில் சொத சொதன்னு சேறாக் கெடக்கு. அந்தச் சேறும் அந்த ஆற்றின் தண்ணீரும் சில் லென்று குளிர்ச்சியாக இருக்கிறது.

அந்தக் குளிர்ந்த சேற்றில் ஒரு நாரை நின்று கொண் டிருக்கிறது. அது சிவந்த அலகால் அந்தக் குளிர்ந்த சேற்றில் மீன் இருக்கிறதா என்று கிளறிக் கிளறித் தேடிக் கொண் டிருக்கிறது.

அந்தக் குளிர்ந்த சேற்றில் நின்று கொண்டிருக்கிற அந்த நாரையின் இறகுகள் முள் முருங்கை மரத்தின் பூக்களைப் போல் மென்மையாக இருக்கிறது.

அது வாடைக் காலம்.

வாடைக்காற்று பலமாக வீசிக் கொண்டிருக்கிறது.

வாடைக் காற்றின் குளிரைத் தாங்க முடியாமல் அந்த நாரை நடுங்குகிறது. அந்த நாரை மேல் குளிர்ந்த தண்ணீரை அள்ளி அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கிறது அந்த வாடைக் காற்று.

வாயிலான் தேவனார்.
குறுந்தொகை.103.

" ஒரு ஓலைப் பூ சேவல் "

ஒரு சிறிய கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில் ஒரு சிறிய வீடு.

அந்தச் சிறிய வீட்டின் கூரைமேல் ஒரு சேவல் படுத்திருக்கிறது.

அது ஒரு அழகான சேவல். அந்தச் சேவலின் கொண்டை மேல் அழகான ஒரு பூ இருக்கிறது. ஓலைப்பூ. அது செக்கச் செவேலென்று அழகாகப் பூத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு விடியக்காலை நேரம்.

இருட்டு இன்னும் விலகவில்லை.

பனி பெய்து கொண்டிருக்கிறது.

வாடைக் காற்று பலமாக வீசிக் கொண்டிருக்கிறது.

கூரைமேல் படுத்திருந்த அழகான அந்தச் சேவல் எழுந்து கூரை மேல் நின்று கொண்டிருக்கிறது. அழகான அந்தச் சேவல் தன் தொண்டையைச் சரி செய்கிறது. அந்தச் சேவல் அதன் அடித் தொண்டையிலிருந்து சத்தம் போட்டு அது அழகாகக் கூவுகிறது. அது கூவிக் கூவி எசமானியை எழுப்பிக் கொண்டிருக்கிறது.

எசமானியின் கணவன் கடந்த ஆண்டு இது மாதிரி ஒரு வாடைக் காலத்தில் இவளைப் பிரிந்து வெளி நாட்டுக்குப் போயிருந்தான். அவன் பெரிய சம்பாத்தியத்தோடு இன்று

இரவு வீட்டுக்கு வந்திருக்கிறான்.

எசமானி அவள் கணவனோடு இரவெல்லாம் காம இன்பத்தை ஆண்டு அனுபவித்தாள். அவள், காமம் கலையாத மயக்கத்தோடு அவள் கணவனோடு படுத்து நல்ல மகிழ்ச்சியான உறக்கம் உறங்கிக் கொண்டிருந்தாள்.

சேவல் கூவிக் கூவி அவள் உறக்கத்தைக் கலைத்து விட்டது.

கோவத்தோடு எழுந்து வந்த அவள் கூவிக் கொண்டிருக்கிற சேவலைப் பார்க்கிறாள்.

அந்தச் சேவலுக்கு அவள் சாபம் கொடுக்கிறாள்..

"யேய்..சேவலே.."

"எப்போதும் பெட்டைக் கோழிகளின் பின்னாலேயே சுற்றிக் கொண்டு திரிகிற சேவலே"

"ஒரு நாள் ஒரு நடுச்சாமத்தில் இருட்டான ஒரு இருட்டில் ஒரு காட்டுப் பூனை வந்து உன்னைக் கடித்துத் தூக்கிக் கொண்டு போகும். அந்தக் காட்டுப் பூனையின் குட்டிகள் உன்னைக் கொஞ்சம் கொஞ்சமாத் தின்று உன்னை மிச்சம் வைத்து மிச்சம் வைத்து அவைகள் பல நாட்கள் உன்னை வைத்திருந்து தின்னும்."

மதுரைக் கண்ணனார்.
குறுந்தொகை.107.

" ஒரு மரம் "

ஒரு பெரிய மரம்.

ஒரு பெரிய யானை அந்தப் பெரிய மரத்தில் ஒரு கிளையைப் பிடித்து வளைக்கிறது.

அந்தக் கிளை வளைந்து ஒடிகிறது.

ஒடிந்த அந்தக் கிளை கீழே விழுந்து விடாமல் அதைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. நாரும், பட்டையும்.

ஒடிந்த அந்தக் கிளை காயவில்லை.

ஒடிந்த அந்தக் கிளைக்கு இன்னும் உயிர் இருக்கிறது.

ஆலத்தூர் கிழார்.
குறுந்தொகை. 112.

" களிமண் "

ஒரு இளம் பெண்.

அவளுக்கு ஒரு தோழி இருக்கிறாள்.

அவள் தோழிக்கு ஒரு காதலன் இருக்கிறான்.

அந்த இளம் பெண் அவள் தோழியின் காதலனிடம். ரகசியமாகப் பேசிக் கொண்டிருக்கிறாள்.

அந்தப் பெண் அவனிடம் சொல்கிறாள்..

"நாளக்கி நான் எங்கள் ஊர் காட்டாற்றுக்குப் போகிறேன்."

"எங்கள் ஊர் காட்டாறு உனக்குத் தெரியும். நீ பலமுறை எங்கள் ஊர் காட்டாற்றுக்கு வந்திருக்கிறாய். "

"அந்தக் காட்டாற்றுக்குப் பக்கத்தில். ஒரு ஊரணி இருக்கிறது. அந்த ஊரணிக்குப் பக்கத்திலேயே ஒரு நந்த வனமும் இருக்கிறது."

"அந்தக் காட்டாற்றிலும் அந்த ஊரணியிலும், நாரைகள்தான் மீனுக்காக நின்று கொண்டிருக்கிறது."

"அந்த நாரைகளைத் தவிர அந்தப் பகுதியில் எங்குமே ஆள் நடமாட்டம் இல்லை."

"நான் தலையில் தேய்த்துக் குளிப்தற்காக களிமண் அள்ளப் போகிறேன். என் தோழியும் என் கூட வருகிறாள். "

"நாளைக்கு நீ வா.."

"ஆளில்லாத ஒரு நந்தவனத்தில் நீங்கள் இரண்டு பேரும் ரகசியமாகச் சந்திக்கலாம்."

மாதிரத்தனார்.
குறுந்தொகை. 113.

" உயிர்மேல் அவ்வளவு ஆசை "

அழகான ஒரு கடல் கரை,

ஒரு கொக்கு அந்தக் கடல்கரையில் நின்று கொண்டிருக்கிறது.

அந்தக் கொக்குக்கு நேர் எதிரில் ஒரு தாழை மரத்தின் புதர் இருக்கிறது.

அந்தப் புதரில் ஒரு நண்டுச் செலவு இருக்கு.

ஒரு நண்டு அந்த நண்டுச் செலவுக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறது. அந்த நண்டு தனக்கு முன்னால் சத்த மில்லாமல் நின்று கொண்டிருக்கிற ஒரு கொக்கைப் பார்க்கிறது. அந்த நண்டு அந்தக் கொக்கைப் பார்த்ததுதான் தாமதம் அது தலை தெறிக்க ஓட்டமாக ஓடுகிறது.

அந்த நண்டு ஓடிய ஓட்டம் ஒரு கயிற்றில் கெட்டிப் போட்டிருந்த ஒரு மாடு கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடியதைப் போல் இருந்தது.

குன்றியனார்.
குறுந்தொகை. 117.

" தப்புக்கணக்கு "

ஒரு பெரிய மலை.

அந்தப் பெரிய மலையில் ஒரு பெரிய மரம்.

ஒரு ஆண் குரங்கு அந்த மரத்தில் ஒரு பெரிய கிளையில் உக்காந்திருக்கிறது. அந்தக் குரங்குக்கு முகம் மட்டும் கருப்பாக இருக்கிறது. இருந்தாலும் அந்தக் குரங்கு அழகாக இருக்கிறது.

அந்த ஆண் குரங்கு அந்தப் பெரிய கிளையில் இருந்து அது இன்னொரு கிளைக்குத் தாவுகிறது. அது தாவிப்போய் ஒரு சிறிய கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறது. அந்தப் பெரிய குரங்கின் பழுவைத் தாங்கிக் கொள்கிற பெலம் இந்தச் சிறிய கிளைக்கு இல்லை. கிளை ஒடிகிறது. ஒடிந்த கிளை கீழே கீழே இறங்கி இறங்கி வந்து அது பள்ளத்தாக்கின் ஆழத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஒடிந்த கிளையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த அந்தக் குரங்கு பள்ளத்தாக்கில் விழுந்து மரணமடைகிறது.

அந்தக் கிளை தன்னைத் தாங்கும் என்று அந்தக் குரங்கு கணக்குப் போட்டது. கணக்கு தப்பாகி விட்டது.

கபிலர்.
குறுந்தொகை. 121.

"வயோதிகம் "

அழகான ஒரு கடல்கரை.

அந்தக் கடல்கரையில் ஒரு மரம் இருக்கிறது. அந்த மரம் குட்ட மரம். அதன் கிளைகள் தாழ்ந்து தாழ்ந்து தரையைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

அலைகள் அந்த மரத்தை ஓயாமல் நனைத்துக் கொண் டிருக்கிறது.

ஒரு நாரை அந்த மரத்தில் உட்கார்ந்திருக்கிறது.

அந்த நாரைக்கு வயதாகி விட்ட து. வயதான அந்த நாரையால் பறக்க முடியவில்லை. அதன் இறகுகள் பறக்கும் வலிமையை இழந்து விட்டது. அந்த நாரை தன் வயோதிகத்தின் இயலாமையை நினைத்து நினைத்து வருத்தத்தோடு உட்கார்ந் திருக்கிறது.

அம்மூவனார்.
குறுந்தொகை.125.

" ஒரு கெண்டை மீன் "

ஒரு பெரிய குளம்.

அந்தப் பெரிய குளத்தில் அழகான ஒரு தாமரை மொட்டு தண்ணீருக்கு மேல் அழகாக நீட்டிக் கொண்டிருக் கிறது.

அந்தப் பெரிய குளத்தில் அந்த வெள்ளைத் தாமரை மொட்டுக்குப் பக்கத்தில் அழகான ஒரு அன்னப் பறவை நின்று கொண்டிருக்கிறது.

ஒரு கெண்டை மீன் அந்த அன்னப் பறவைக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறது.

அந்த அன்னப் பறவை தனக்கு முன்னால் வந்து நின்று கொண்டிருக்கிற கெண்டை மீனை தன் அலகால் கொத்திப் பிடிக்கிறது. அந்த அன்னப் பறவையின் பிடியில் இருந்து அந்தக் கெண்டை மீன் தப்பி ஓடி விட்டது.

அந்தக் கெண்டை மீன் அந்தப் பெரிய குளத்தில் உள்ள வெள்ளைத் தாமரை மொட்டைப் பார்க்கும் போதெல்லாம் அது தன்னை விழுங்க வந்த அன்னப் பறவை என்று நினைத்துக் கொண்டு பயந்து பயந்து தண்ணீருக்குள் மூழ்கி ஒளிந்து கொள்கிறது.

ஓரம்போகியார்.
குறுந்தொகை.127.

" தொண்டி "

தொண்டி என்பது சேர மன்னனின் தலை நகரம். அது சேர மன்னனின், துறைமுகப் பட்டணம். இந்தத் தொண்டிப் பட்டணம் மேற்கு கடல்கரையில் இருக்கிறது. இந்த மேற்குக் கடலில் ருசியான அயிரை மீன்கள் கிடைக்கும்.

ஒரு பெரிய கடல் கிழக்குத் திசையிலும் இருக்கிறது.

இந்தக் கடல்கரையில் ஒரு நாரை நின்று கொண்டிருக் கிறது. இந்த நாரைக்கு வயதாகி விட்டது. இந்த நாரைக்கு இரண்டு சிறகுகளும் இல்லை.

சிறகுகளை இழந்த இந்த நாரைக்கு இந்தப் பெரிய கடலில் மீன்கள் கிடைக்கவில்லை. மீன்கள் கிடைக்காத இந்த நாரை மேற்குக் கடலில் கிடைக்கிற ருசியான அயிரை மீன்களை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறது.

பரணர்.
குறுந்தொகை.128

" வெள்ளி வீதி "

எங்கள் ஊரில் அரண்மனை மாதிரி ஒரு பெரிய வீடு இருக்கிறது. அந்தப் பெரிய வீட்டில் அழகான ஒரு பெண் இருக்கிறாள். அவள் பெயர் வெள்ளி வீதி. வெள்ளி வீதிக்கு திருமணம் ஆகி விட்டது.

வெள்ளி வீதியின் கணவனைக் கொஞ்ச நாளாகக் காணோம். அவள் வீட்டார். வெள்ளி வீதியின் கணவனை ஊரெல்லாம் தேடித் தேடி அலைந்து கொண்டிருக் கிறார் கள். அவர்களால் வெள்ளி வீதியின் கணவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

தன் கணவனைக் கண்டு பிடிக்க முடியாமல் அலைந்து அலைந்து களைத்துப்போன அவள் வீட்டாரிடம் வெள்ளி வீதி சொல்லுகிறாள்..

"என் கணவன் அவர் கால்களால் கடல்மேல் நடந்து கடலைக் கடந்து போயிருக்க மாட்டார். என் கணவர் பறந்து பறந்து வான மண்டலத்தின் உச்சிக்கும் போயிருக்க மாட்டார். என் கணவர் இந்தப் பெரிய நிலத்தைத் தோண்டி நிலத்துக்கு உள்ளேயும் போயிருக்க மாட்டார்."

"இது மாதிரி வித்தைகள் எதையும் என் கணவர் படிக்கவில்லை."

"நீங்கள் எந்த ஒரு நாட்டையும் தவற விடாமல்

எல்லா நாடுகளுக்கும் போக வேண்டும். நீங்கள் சின்னச் சின்ன ஊர்களுக்கெல்லாம் போக வேண்டும். நீங்கள் ஒருஒரு வீடாகப் போய் தீர விசாரித்துத் தேடிப் பார்க்க வேண்டும். நீங்கள் இன்னும் தீவிரமாகத் தேடினால் என் கணவரை உங்களால் நிச்சயம் கண்டு பிடிக்க முடியும்."

வெள்ளி வீதியார்.
குறுந்தொகை.130.

"தாயைத் தேடிக் கொண்டிருக்கிறது ஒரு கன்றுக் குட்டி"

எங்கள் வீட்டில் நாங்கள் ஒரு பசு வளர்க்கிறோம். எங்கள் பசு நேற்று ஒரு கன்றுக் குட்டியை ஈன்று இருக்கிறது.

எங்கள் பசு இன்று ஊர் மாடுகளோடு சேர்ந்து காட்டுக்கு மேய்ச்சலுக்குப் போயிருக்கிறது.

பொழுது மறைந்து விட்டது.

எங்கள் பசு இன்னும் வீட்டுக்குத் திரும்பி வரவில்லை. எங்கள் கன்றுக் குட்டிக்கு கழுத்து பெலம் இல்லை. கழுத்து பெலம் இல்லாததால் கன்றுக் குட்டியின் தலை ஆடிக் கொண்டேயிருக்கிறது.

நேற்றுத்தான் பிறந்த இந்தப் பிஞ்சுக் கன்றுக் குட்டி அதன் தாயைப் பார்ப்பதற்காக அது தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறது.

சிறைக்குடி ஆந்தையார்.
குறுந்தொகை.132.

"இரண்டாவது மகசூல்"

ஒரு சிறிய விவசாயி.

அந்தச் சிறிய விவசாயி அவர் நிலத்தில் தினை விதைத்திருக்கிறார். தினைப் பயிர்கள் அழகாகக் கதிர் வாங்கிக் கொண்டு நிற்கின்றன. அந்தத் தினைக் கதிர்கள் தக தகன்னு தங்க நிறத்தில் அழகாக நிற்கிறது. கிளிகள் அந்தத் தினைக் கதிர்களைக் கொத்திக் கொண்டு போகிறது.

அந்தத் தினைக் கதிர்கள் அறுவடையாகி விட்டது. அந்தத் தினைப் பயிர்கள் கதிர்கள் இல்லாமல் இப்போது மொட்டையாக வெறும் தட்டைகள் மட்டும் நின்று கொண்டிருக்கிறது.

அந்தத் தினைக் காட்டில் பெரிய மழை பெய்தது.

தினைக் காடு குளிர நனைந்தது.

கதிர்களை இழந்த அந்தத் தினைத் தட்டைகள் பச்சைப் பசேலென்று அழகாகத் தளிர்த்துக் கொண்டிருக்கிறது.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.
குறுந்தொகை. 133.

"உன் கணவர் நல்லவர்"

"என் உயிரினும் மேலான என் தோழியே."

"அழாதே.."

"அழுவதை விடு.."

"உன் கணவர் உன்னை விட்டு விட்டு அவர் வெளிநாட்டுக்குப் போய் விடுவார் என்று நினைத்துத் தானே நீ அழுதுகொண்டிருக்கிறாய்..?"

"உன் கணவர் உன்னை விட்டு விட்டு எங்கும் போகமாட்டார்.."

"அவர் உன்னை விட்டுப் பிரிந்த பொழுதே நீ உயிரை விட்டு விடுவாய் என்பது அவருக்குத் தெரியும்.

"உன் கணவர் ஒரு நாள் நம்மிடம் என்ன சொன்னார் என்று உனக்குத் தெரியுமா..?"

"நான் சொல்லுகிறேன் கேள்.."

"ஆடவனுக்குத் தொழில்தான் அவன் உயிர்.. கணவன் வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு குடும்பப் பெண்ணுக்கு அவள் கணவன்தான் அவளுக்கு உயிர்."

"நல்லவர்கள் பிறருக்குச் சொன்னது மாதிரித்தான் அவர்கள் வாழ்வார்கள்.."

"உன் கணவர் நல்லவர்.."

"உன் கணவர் பிரயாணத்தை நிறுத்தி விடுவார்.."

"அவர் உன்னோடுதான் இருப்பார்.."

"என் உயிரினும் மேலான என் தோழியே.."

"அழுகையை விடு.."

"அழாதே.."

பாலைபாடிய பெருங்கடுங்கோ.
குறுந்தொகை. 135.

" காமம் "

ஒரு நாள், கடவுள் எனக்கு உரிய என்னவளை அடையாளம் காட்டினார். நான் அவளைச் சந்தித்தேன். அவள் எனக்கு உரிமைப் பட்டவள் ஆகையால் அவளைப் பார்த்ததும் என் காமம் மலர்ந்தது.

நாங்கள் காதலித்தோம்.

நாங்கள் திருமணம் செய்து கொண்டோம்.

காமம் எங்களைச் சேர்த்து வைத்தது.

காமம் உள் நோயும் இல்லை.

காமம் தொற்று நோயும் இல்லை.

மக்கள் சொல்வதைப் போல் காமம் இழிவானதும் இல்லை.

கடவுள் எங்களைச் சந்திக்க வைத்தார்.

காமம் எங்களைச் சேர்த்து வைத்தது.

மிளைப்பெருங் கந்தனார்.
குறுந்தொகை.136.

" இது எங்கள் வீடு "

எங்கள் வீட்டுக்குப் பின்னால் ஒரு பெரிய கொட்டாரம் இருக்கிறது. எங்கள் கொட்டாரத்தில் ஒரு ஏழிலைப் பாலை மரம் ஒன்று இருக்கிறது. அந்த ஏழிலைப் பாலை மரத்தைத் தாண்டிப் போனால் அங்கே ஒரு நொச்சி மரம் இருக்கிறது. அந்த நொச்சி மரத்தின் இலைகள் மயில்களின் கால் விரல்களைப் போல் அவ்வளவு அச்சு அசலாக இருக்கிறது. நொச்சி பூத்திருக்கிறது.

நொச்சி மரத்திலிருந்து பூக்கள் உதிர்ந்து கொண்டிருக்கின்றன.

மெல்லமாய் உதிர்ந்து கொண்டிருக்கிற அந்த மெல்லிய பூக்கள் கீழே விழுகிற சத்தம் எனக்கு கேட்கிறது.

இந்தச் சத்தத்தை எதிர்பார்த்துத்தான் நான் இரவெல்லாம் உறங்காமல் கண்விழித்திருந்தேன்.

என் காதலன். வந்திருக்கிறான்.

நொச்சி மரத்தில் பூக்களை உலுப்புவது அவன்தான்.

இது நடுச்சாமம்.

நல்ல வேளை. இந்தப் பெரிய ஊரில் உள்ள மக்கள் எல்லாரும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கொல்லன் அழிசி.
குறுந்தொகை.138.

" ஒரு தாய்க் கோழி "

ஒரு பெரிய வீடு. அந்த வீட்டுக்குப் பின்னால் ஒரு பெரிய கொட்டாரம் இருக்கிறது. அந்தக் கொட்டாரத்தில் ஒரு தாய்க் கோழியும் அதன் குஞ்சுகளும் மேய்ந்து கொண் டிருக்கின்றன.

அது ஒரு மாலை நேரம்.

ஒரு காட்டுப் பூனை, அந்தப் பெரிய கொட்டாரத் தைச் சுற்றி உள்ள ஒரு வேலியில், ஒரு மூலையில் ஒளிந்து கொண்டிருக்கிறது.

அந்தக் காட்டுப் பூனை அந்தக் கோழிக் குஞ்சுகளை வேட்டையாடுவதற்காக வந்திருக்கிறது.

தாய்க் கோழி அந்தக் காட்டுப் பூனையைப் பார்த்து விட்டது. அதன் குலை பயந்து நடுங்குகிறது.

காட்டுப் பூனையைப் பார்த்துப் பயந்து போன அந்தத் தாய்க் கோழி தன் குஞ்சுகளைத் தன்னிடம் வேகமாக ஓடி வரும்படி கூவிக் கூவிக் கூப்பிடுகிறது.

ஒக்கூர் மாசாத்தியார்.
குறுந்தொகை.139.

" இரவு வேண்டாம் "

"அன்புள்ள என் தோழியே.."

"நீ..என் காதலனிடம் சொல்.."

"அவன் என்னைச் சந்திப்பதற்கு இனி இரவில் வரவேண்டாம் என்று அவனிடம் சொல். அவன் என்னை நடுச்சாமத்தில் வந்து சந்திக்கிறான். அந்த நடுச்சாமத்தில் பயங்கரமான கொடிய மிருகங்கள் வாழ்கிற அந்தக் காட்டுப் பாதையில் அவன் நடந்து வருகிறான். அவன் நடந்து வருகிற அந்த நடுச்சாமத்தில்தான் அந்தக் காட்டில் வாழும் புலி களும், யானைகளும், பசியோடு இரை தேடி அலைந்து கொண்டிருக்கும்.."

"ஆண் புலியும், ஆண் யானையும் இயல்பாகவே பகை மிருகங்கள். அந்தக் கொடிய மிருகங்கள் ஒன்றை ஒன்று கொல்வதற்காக அந்த நடுச்சாமத்தில்தான் அவைகள் கொலை வெறியோடு அந்தக் காட்டில் அலைந்து கொண்டிருக்கும். அந்த நடுச்சாமத்தில் அந்தக் காட்டுப் பாதையில் அவன் நடந்து வருவது. அவன் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.என்று நான் பயப்படுவதாக அவனிடம் சொல்.."

"நான் நாளை தினைக் காட்டுக்குக் காவலுக்குப்

போகிறேன். அவனை அங்கே வரச் சொல்.."

என் காதலனை என்னிடம் பகலில் வரச் சொல்.

மதுரை பெருங்கொல்லனார்.
குறுந்தொகை.141.

" ஏரிக்கரை "

எங்கள் ஊரில் ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரிக்கரை, அந்த ஏரியில் எடுத்த மண்ணால் அமைக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் ஏரியில் எப்போதும் தண்ணீர் இருக்கும்.

ஏரிக்கரை தாங்கக் கூடிய அளவுக்கு மட்டும் ஏரியில் தண்ணீர்இருக்கும்.

ஒரு நாள் எங்கள் ஏரிக்கு ஒரு பெரிய வெள்ளம் வந்தது. அந்தப் பெரிய வெள்ளத்தை எங்கள் ஏரிக்கரையால் தாங்க முடியவில்லை.

கரை உடைந்தது.

என் காமமும் அப்படித்தான்.

என் காமம் முன்பெல்லாம் என்னால் தாங்கக் கூடிய அளவில் இருந்தது. அதனால் என் நாணம் அடக்கமாக என்னிடத்தில் வெகுகாலம் வரை இருந்த து.

இன்று என் காமம் எல்லை மீறி என்னை மீறி விட்டது. என்னால் என் காமத்தைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. அதனால் நான் என் நாணத்தைக் கைவிட்டு விட்டு நான் என் காதலனோடு போய்க் கொண்டிருக்கிறேன்.

வெள்ளி வீதியார்.
குறுந்தொகை.149.

" காதலன் மார்பில் படுத்திருக்கிறாள் ஒரு பெண் "

எங்கள் ஊரில் ஒரு மலை இருக்கிறது. அந்த மலையைச் சுற்றியுள்ள காடுகளில் தினை விதைத்திருக்கிறார்கள். தினைப் பயிர்கள் பச்சைப் பசேலென்று பசுமையாக இருக்கிறது.

மலை உச்சியில் ஒரு பரண் இருக்கிறது. அந்தப் பரணுக்குப் பக்கத்தில் சந்தன விறகுகள் எரிந்து கொண்டிருக்கிறது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் அணைந்து அணைந்து எரிவதைப் போல் அந்தச் சந்தன விறகுகள் அணைந்து அணைந்து எரிந்து கொண்டிருக்கிறது. அந்தப் புகையிலிருந்து வருகிற சந்தன மணம் அந்த மலை எங்கும் மணந்து கொண்டிருக்கிறது.

அந்த மலை உச்சியிலிருக்கிற காவல் பரணில் ஒரு காவல்காரன் இருக்கிறான். அகலமான அவன் மார்பில் அவன் சந்தனம் பூசியிருக்கிறான். அவனை நான் காதலிக்கிறேன். நான் என் வீட்டில் இருந்து கொண்டு என் காதலனை நினைத்துக் கொண்டிருக்கிறேன். என் காதலனை நான் நினைக்க நினைக்க என் காமம் பெருக்கெடுத்துக் கொண்டு இருக்கிறது.

இதோ என் காதலன் என் பக்கத்தில் இருக்கிறான்.

சந்தனம் பூசிய அகலமான அவன் மார்பில் நான் படுத்திருக்கிறேன். என்ன ஆச்சரியம்..இப்போது என்னிடம் காமம் இல்லை.

மாடலூர் கிழார்.
குறுந்தொகை. 150.

" வக்கா என்று ஒரு பறவை "

ஒரு காட்டில் ஒரு வக்கா குருவி கூடு கட்டியிருக்கிறது. அந்தக் கூட்டில் அம்மாக் குருவியும் அதன் குஞ்சுகளும் இருக்கின்றன.

இந்தக் குருவிகளின் கால்கள் செக்கச் செவேரென்று சிகப்பாய் அழகாக இருக்கிறது. இந்தக் குருவிகளின் குரல் புல்லாங்குழலின் இசையைப் போல் இனிமையாக இருக்கிறது. கணவன் குருவி இரை தேடப் போயிருக்கிறது.

அது கூட்டுக்குத் திரும்பி வருகிற நேரமிது.

ஆனால் அது கூட்டுக்கு இன்னும் திரும்பி வர வில்லை. கணவன் குருவி இன்னும் கூட்டுக்கு வராததால் பெண் குருவி தன் கணவனை எதிர்பார்த்துக் கொண்டு மன வேதனையோடு அது தவியாய்த் தவித்துக் கொண்டு இருக்கிறது.

அந்த நேரம் ஒரு பருந்து அந்தக் குருவிக் கூட்டுக்கு வருகிறது.

தன் குஞ்சுகளையும் தன்னையும் கொல்ல வருகிற பருந்தைப் பார்த்ததும் மரண பயத்தில் கூப்பாடு போட்டு அழுகிறது. அம்ம அழுவதைப் பார்த்து குஞ்சுகளும் அம்மை யோடு சேர்ந்து அழுகின்றன.

தூங்கலோசியார்.
குறுந்தொகை.151.

" தாயில்லாத ஒரு முட்டை "

ஒரு காடு. அந்தக் காட்டில் ஒரு மரம். அந்த மரத்தில் ஒரு குருவிக் கூடு. அந்தக் குருவிக் கூட்டில் ஒரு முட்டை இருக்கிறது.

அந்த முட்டைக்குத் தாயில்லை.

தாய் முட்டையிட்டதும் செத்து விட்டது.

தாய்க் குருவி செத்து விட்டதால் அடை காக்காத அந்த முட்டை "கரு வளராமல்" கருக்கலங்கி, தாய் இல்லாத அந்த முட்டை கெட்டு கூமுட்டை ஆகிவிட்டது.

கிளிமங்கலங் கிழார்.
குறுந்தொகை. 152.

" பயமில்லை "

எங்கள் ஊரில் ஒரு மலை இருக்கிறது. அந்த மலையில் ஒரு பெரிய ஆந்தை இருக்கிறது. அந்த ஆந்தை கூவும் போது எனக்குப் பயமாருக்கும்.

எங்கள் முற்றத்தில் ஒரு பலா மரம் இருக்கிறது. அந்தப் பலா மரத்தில் ஒரு பெரிய கிளையில் ஒரு ஆண் குரங்கு இருக்கிறது. அந்த ஆண் குரங்கு அந்தக் கிளையில் இருந்து இன்னொரு கிளைக்குத் தாவிக் குதிக்கும்போதும் எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது.

நான் ஒரு பாலைவனத்தில் நடந்து போய்க் கொண்டிருக்கிறேன். என் காதலனோடு. எனக்கு எந்தப் பயமும் இல்லை.

கபிலர்.
குறுந்தொகை. 153.

" அலைஅலையாக மிதந்து கொண்டிருக்கிறது கானல் "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் ஒரு கள்ளிமரம் இருக்கிறது. அந்தக் கள்ளி மரத்தின் அடித்தூர் காய்ந்து அதன் பட்டைகள் வெடித்திருக்கின்றன. அந்தக் கள்ளி மரத்தின் காய்களும் வெடித்திருக்கிறது.

ஒரு புறா அந்தக் கள்ளி மரத்தில் உக்காந்திருக்கிறது.

அது ஒரு பெண் புறா. அந்தப் பெண் புறாவுக்கு சின்னச் சின்னக் கால்கள். அந்தப் பெண் புறா அதன் குட்டக் குட்டக் கால்களால் அது குறுநடையாய் நடப்பது அழகாக இருக்கிறது. அந்தப் பெண் புறாவின் கழுத்து ரோமங்களில் அழகான சின்னச் சின்னப் புள்ளிகள் இருக்கிறது. இந்தச் சிறிய பெண் புறாவுக்கு அழகான சின்னச் சின்னப் புள்ளிகள் பேரழகைத் தருகிறது.

ஒரு மதிய நேரம்

சரியான வெயில்.

கானல் அலை அலையாக மிதந்து கொண்டிருக்கிறது.

இந்த மதிய வெயிலில் அந்தப் பெண் புறாவின் கணவன் இரை தேடப் போயிருக்கிறது. அந்த ஆண் புறா மேலே மேலே பறந்து பறந்து அது வெகு தூரத்திற்குப்

போயிருக்கிறது.

அந்தப் பெண் புறா தனிமையில் துயரத்தோடு உட்கார்ந்து இருக்கிறது.

அந்தப் பெண் புறா தன் கணவனை கூவிக் கூவி அழைத்துக் கொண்டு இருக்கிறது.

மதுரை சீத்தலைச் சாத்தனார்.
குறுந்தொகை. 154.

" மந்திரங்களால் காம நோயைத் தீர்த்து வைக்க முடியாது"

பார்ப்பன மகனே..
பார்ப்பன மகனே..
விரத உணவு உண்ணும் பார்ப்பன மகனே..
உங்களுக்கு உரியது எது..?
ஒரு கமண்டலம்..
ஒரு கம்பு..
நான்கு வேதங்கள் பார்ப்பன மகனே..

உங்கள் நான்கு வேதங்களுக்கும் எழுத்துக்கள் இல்லை. நீங்கள் மனப்பாடம் செய்து உங்கள் வேதங்களை உங்கள் மனதில் வைத்திருக்கிறீர்கள்.

உங்கள் வேதங்களில் ஆற்றல் மிக்க மந்திரங்கள் இருக்கிறது. என்று சொல்லுகிறீர்கள்.

என் காம நோயை உங்கள் மந்திரங்களால் தீர்த்து வைக்க முடியுமா...?

உங்கள் மந்திரங்கள் என் காம நோயைத் தீர்த்து வைக்காது. என் காம நோயை என் தலைவியால்தான் தீர்த்து வைக்க முடியும்.

பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்.
குறுந்தொகை.156.

" தூரம் "

ஒரு இளம்பெண். அவளுக்குத் திருமணம் ஆகி இருக்கிறது. அவள் கணவன் வீட்டில் இருக்கிறாள்.

ஒரு அதிகாலை நேரம்.

சேவல் கூவுகிறது. சேவல் கூவுகிற சத்தத்தை அந்தப் பெண் கேட்கிறாள். சேவல் கூவுகிற சத்தத்தைக் கேட்டதும் அந்த பெண்ணின் நெஞ்சு அவளுக்கு வெடித்து விடும் போல் இருக்கிறது.

பொழுது விடிந்து கொண்டு வருகிறது.

விடிந்து கொண்டு வருகிற அழகான அந்தக் காலைப் பொழுதை அவள் பார்க்கிறாள். அந்த இளம் காலைப் பொழுது அவளுக்கு வாள் மாதிரித் தெரிகிறது. அந்தப் பெண் பொழுதைப் பார்த்துப் பயப்படுகிறாள்.

பொழுது விடிஞ்சதும் அந்தப் பெண்ணை அவள் கண வனிடம் இருந்து பிரித்து விடுவார்கள்.

அந்தப் பெண் அவள் கணவனிடம் இருந்து பிரிந்து தனியாக இருக்க விரும்பவில்லை.

பொழுது விடியக் கூடாது என்று அவள் நினைக்கிறாள். அந்தப் பெண் மாதவிலக்கு ஆகி இருக்கிறாள்.

அள்ளூர் நன்முல்லையார்.
குறுந்தொகை. 157.

" இமய மலையால் கூட நிமிர்ந்து நிற்க முடியாது "

மழை பெலமாகப் பெய்து கொண்டிருக்கிறது.

காற்று வேகமாக வீசிக் கொண்டிருக்கிறது.

இடி பயங்கரமாக விழுந்து கொண்டிருக்கிறது.

இடி விழ..விழ..பெரிய பெரிய மலைப் பாம்புகள் எல்லாம் செத்துக் கொண்டிருக்கிறது.

இந்தப் பெரிய மழையின் கோவத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல், இமய மலை கூட நேராக நிற்கத் திணறிக் கொண் டிருக்கிறது.

மழையே...

பெரிய மழையே..

நான் ஒரு ஏழைப்பெண்.

நான் திருமணம் ஆகாமல், கணவன் துணை இல் லாமல், தனிமையில் இருக்கிறேன்.

நான் குளிரைத் தாங்க முடியாமல் நடுங்கிக் கொண்டி ருக்கிறேன்.

மழையே..

பெரிய மழையே..உன் கோவத்தை இந்த ஏழைப் பெண்ணிடம் காட்டாதே. இந்த ஏழைப் பெண்ணிடம் உன் இரக்கத்தைக் காட்டு.

அவ்வை.
குறுந்தொகை.158.

"விவரம் இல்லாத பெற்றோர்கள்"

அழகான ஒரு இளம் பெண்.

அவள் காதுகளில் ஜிமிக்கி அணிந்திருக்கிறாள். அந்த ஜிமிக்கியில் நுட்பமான வேலைப்பாடுகள் இருக்கிறது. அழகான அந்த ஜிமிக்கிகள் அழகான அந்தப் பெண்ணுக்கு மேலும் அழகு சேர்க்கிறது.

அவளுக்கு சிறிய இடை. அந்தச் சிறிய இடையில் கனமான பச்சையிலைப் பாவாடையை உடுத்தி இருக்கிறாள் அவள், சிறிய இடை, அந்தப் பெரிய பாவாடையைச் சுமக்க முடியாமல் துன்பப் பட்டுக் கொண்டு இருக்கிறது.

அவள் சிறிய இடைக்கு மேல் பெரிய மார்பகங்கள் இருக்கிறது. அவளுடைய சிறிய இடையை அவளுடைய பெரிய மார்பகங்கள் மேலும் துன்பப் படுத்துகிறது.

இவள் ஒருத்தனைக் காதலிக்கிறாள்.

இவள் ஒருத்தனைக் காதலிக்கிற விவரம் அவளுடைய பெற்றோர்களுக்குத் தெரியவில்லை. இவள் பெற்றோர்கள் விவரம் இல்லாத அப்பாவிகளாக இருக்கிறார்கள்.

இவள் காதலிக்கிற விவரம் இவள் சொந்தக் காரர் களுக்குத் தெரிந்திருக்கிறது. இவளை, இவள் காதலிக்கிற வனுக்கே திருமணம் செய்து வைப்பதற்கு இவள்

சொந்தக்காரரர்கள் ஒரு முயற்சியும் எடுக்கவில்லை.

அந்த ஊர் மக்களிடம் உயர்ந்த பண்புகள் இல்லை. அவர்கள் மூடர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வடம வண்ணக்கண் பேரி சாத்தனார்.
குறுந்தொகை.159.

"அன்றில் பறவைகள்"

ஒரு பெரிய பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் உயரமான ஒரு மரம் இருக்கிறது.

அந்த மரத்திற்குப் பெயர் தடா மரம்.

அந்தத் தடா மரத்தில் அன்றில் பறவைகள் கூடு கட்டியிருக்கிறது.

அந்த அன்றில் பறவைகளில் பெண் பறவையின் அலகு இறால் மீன் வளைந்திருக்குமே அதே மாதிரி வளைந்திருக்கிறது.

ஆண் அன்றில் பறவையின் தலை நெருப்பு நிறத்தில் செக்கச் செவேரென்று இருக்கிறது.

இது

நடுச்சாமம்.

வாடைக் காற்று வீசிக் கொண்டிருக்கிறது.

அந்த அன்றில் பறவைகள் கொஞ்சிக் குலவி சிரித்துப் பேசி மகிழ்ச்சியோடு காதல் விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறது.

மதுரை மருதன் இளநாகனார்.
குறுந்தொகை. 160.

"மகளே"

மழை சினந்து பெய்து கொண்டிருக்கிறது.

பகல் முழுவதும் பொழுது முகமே தெரியவில்லை.

இரவு வேகமாக வந்து விட்டது.

இருட்டு, பேய் இருட்டாக, கன்னங் கரேறென்று இருட்டிக் கொண்டு வருகிறது.

பேய்கள் கூட இந்தப் பேய் இருட்டில் கண்களைத் திறக்கப் பயப்படுகின்றன.

என் தாய் என் தம்பியை அவள் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு படுத்திருக்கிறாள். அவன் மார்பில் புலிப்பல் பதித்த தங்கச் சங்கிலி அழகாய்ப் புரண்டு கொண்டிருக்கிறது.

மழை கொட்டு கொட்டென்று பலமாகப் பெய்து கொண்டிருக்கிற இந்த நடுச்சாமத்தில், இந்தப் பேய் இருட்டில் என் தாய் என்னைக் கூப்பிடுகிறாள்..

"மகளே.."

நான் வீட்டில் படுத்திருக்கிறேனா என்று என் தாய் சரிபார்த்துக் கொள்கிறாள்.

இந்த மழைக் காற்றில் சந்தன மணம் மிதந்து மிதந்து வந்து கொண்டிருக்கிறது. என் காதலன் என்னைச் சந்திப்பதற்கு வந்திருக்கிறான். அவன் எங்கள் கொட்டாரத்தில்

மறைந்து நின்று கொண்டிருக்கிறான்.

அவன் என்னைச் சந்தித்து விட்டுத்தான் போக வேண்டும் என்று இந்தப் பெரிய மழையில் நனைந்து கொண்டு எனக்காக நின்று கொண்டிருக்கிறான்.

என் தாய் உறங்காமல் விழித்திருக்கிறாள்.

என்னால் என் காதலனிடம் போக முடியவில்லை.

நக்கீரனார்.
குறுந்தொகை. 161.

" இது எங்கள் நிலம் "

இது எங்கள் நிலம்.

மழை எங்களுக்குப் போதுமான அளவுக்குப் பெய் கிறது.

ஏரி நிரம்பியிருக்கிறது.

காடுகளில் மக்கள் வேலை செய்து கொண்டிருக் கிறார்கள்.

பொழுது மறைந்து கொண்டிருக்கிறது.

காடுகளில் வேலை செய்து கொண்டிருந்த மக்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்,

நான் வெளிநாட்டில் இருந்து இப்போதுதான் ஊருக்கு வந்து கொண்டிருக்கிறேன்.

வழி எங்கும் முல்லைப் பூக்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது.

என் மனைவியைத் தனிமையில் தவிக்கவிட்டு, நான் அவளைக் கொடுமைப் படுத்தியதால், இந்த முல்லைப் பூக்கள் என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பது போல் எனக்குத் தோன்றுகிறது.

கருவூர்ப் பவுத்திரனார்.
குறுந்தொகை.162.

" கடலே..நீயுமா.."

எங்கள் ஊருக்குக் கிழக்கே ஒரு பூங்கா இருக்கிறது.

பூங்காவுக்குக் கிழக்கே ஒரு கடல் இருக்கிறது.

கடல்கரையில் தாழை மரங்கள் பூத்து மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது. கொக்குகள் மீன்களுக்காகக் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருக்கின்றன. கடல் அலைகள் தாழை மரங்களின் மேல் இடைவிடாமல் மோதிக் கொண் டிருக்கிறது. அலைகள் மோத மோத தாழை மரங்கள் அசைந்து ஆடிக் கொண்டிருக்கிறது.

"கடலே.."

"இந்த நடுச்சாமத்தில் உன் குரல் கேட்டுக் கொண் டிருக்கிறதே..ஏன்..? "

"நீ யாரால் இப்படி வருத்தப்பட்டுக் கொண் டிருக்கிறாய்..? "

"என் காதலன் என்னைக் கைவிட்டதால் நான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன்."

"கடலே..நீயுமா..? "

அம்மூவனார்.
குறுந்தொகை. 163.

" விவரம் இல்லாத ஒரு பெண் "

கேள்..தோழி..

அவள் என் மேல் அபாண்டமாகப் பழி சுமத்து கிறாள். அவள் விவரம் இல்லாத ஒரு பெண். அவள் வீட்டை விட்டு வெளியே வராமல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிறாள். அவளுக்கு வெளி உலகம் தெரியவில்லை.

நான் அவள் கணவனை அபகரித்துக் கொண்டதாக அவள் நினைக்கிறாள். நான் அவள் கணவனை அபகரிக்கவே இல்லை.

அவள் கணவன்தான் என்னைத் தேடி வந்தான்.

அவள் கணவனைத் தேடி நான் போனதே இல்லை.

கேள்..தோழி..

ஒரு ஆறு. அந்த ஆற்றில் ஒரு வாளைமீன் இருக்கிறது. அந்த வாளை மீனுக்கு அழகான இரண்டு கொம்புகள் இருக் கிறது. அது ஒரு பெண் மீன், அந்தப் பெண் மீனுக்கு நல்ல உடல் வாகு. அது சினை. அது பருவ மினுமினுப்போடு இருக்கிறது.

அந்த ஆற்றங்கரையில் ஒரு மாமரமும் இருக்கிறது. அந்த மாமரத்தில் மாம்பழங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு மாம்பழம் அந்த ஆற்றில் விழுகிறது. அந்த மாம்பழம் ருசியானது. தண்ணீரில் விழுந்த

ருசியான அந்த மாம்பழம் மிதந்து மிதந்து அழகான அந்த வாளை மீனிடம் போய்ச் சேருகிறது.

அந்த மாம்பழம் கிடைப்பதற்காக அந்த வாளை மீன் ஒரு முயற்சியும் செய்யவில்லை. ருசியான அந்த மாம்பழம் அழகான அந்த வாளை மீனிடம் தானாகவே போய்ச் சேர்ந்தது.

அவள் கணவனை என் கணவனாகப் பெறுவதற்கு நான் ஒரு முயற்சியும் செய்யவில்லை. அவள் கணவன் என்னிடம் அவனாகவே வந்து சேர்ந்தான்.

என் மேல் எந்தத் தப்பும் இல்லை,

கேள்..தோழி..

நம் ஊருக்கு வெகு தொலைவில் குன்றூர் என்று ஒரு சிறிய ஊர் இருக்கிறது. இது பழங்காலத்து ஊர். அந்தப் பழங்காலத்து ஊரில் விவசாயப் பழங்குடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஊருக்குக் கிழக்கே ஒரு பெரிய கடல் இருக்கிறது. நான் தப்புச் செய்திருந்தால் அந்தப் பெரிய கடல் என்னைக் கடலில் மூழ்கடித்துக் கொல்லும்.

மாங்குடி மருதனார்.
குறுந்தொகை. 164.

" கடல் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது "

ஒரு பெரிய கடல்.

அந்தப் பெரிய கடல்கரையில் நாரைகள் வரிசையாக உட்கார்ந்திருக்கின்றன. அந்த நாரைகளின் இறகுகள் வெள்ளை வெளேர் என்று அழகாக இருக்கிறது.

அந்தப் பெரிய கடல் இன்று கொந்தளித்துக் கொண் டிருக்கிறது. அலைகள் கோபத்தோடு சீறிக்கொண்டு உயரமாக எழும்புகின்றன. பெரிய பெரிய அந்தப் பேரலைகள் வேகமாக எழும்பி கரையில் வேகமாக வந்து மோதுகிறது. கரைக்கு வருகிற அந்தப் பேரலைகள் மீன்களைக் கரைக்குக் கொண்டு வரவே இல்லை.

அந்த நாரைகள் இன்று இந்தப் பெரிய கடலில் மீன் பிடிக்க முடியாது என்று புரிந்து கொள்கின்றன. அந்த நாரைகள் அயிரை மீன்களைத் தேடி ஊர்க்காட்டில் இருக்கிற ஒரு பெரிய குளத்துக்குப் போகலாம் என்று முடிவெடுக்கின்றன.

வான வெளியில் வரிசையாகப் பறந்து போய்க் கொண்டிருக்கிறது, அந்தப் பெரிய நாரைக் கூட்டம்.

கூடலூர் கிழார்.
குறுந்தொகை. 166.

" தயிர்ச் சோறு "

ஒரு இளம்பெண்.

அவளுக்கு இப்பொழுதுதான் திருமணம் ஆகியிருக் கிறது.

அந்தப் பெண் அவள் கணவன் வீட்டில் இருக் கிறாள். அவள் நன்றாகத் துவைத்த அழகான சேலையை உடுத்தியிருக்கிறாள்.

அந்தப் பெண் சமையல் செய்து கொண்டிருக்கிறாள்.

அவள் கட்டித் தயிரைப் பிசைகிறாள்.

அடுப்பில் தீ எரிந்து கொண்டிருக் கிறது.

பொரிக்கான் சட்டியில் நெய் உருகிக் காய்ந்து கொண்டிருக்கிறது.

அவள் அவசரம் அவசரமாகத் தயிர் பிசைந்த அவள் கை விரல்களை அவள் சேலையில் துடைக்கிறாள். அவள் பிசைந்த தயிரைப் பொரிக்கான் சட்டியில் கொட்டுகிறாள். பொரிக்கான் சட்டியிலிருந்து புகை எழும்புகிறது. அவள் கண்களைப் புகை நிரப்புகிறது.

கணவனுக்கு அவள் சோறு பரிமாறுகிறாள்.

வட்டில் நிறையச் சோறு. சோறு தெரியாமல் குழம்பு.

அவள் கணவன் ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறான்.

அவன் மனைவியிடம் சொல்கிறான்..

"குழம்பு நல்லாருக்கு.."

அவள் சமையலை அவன் புகழ்ந்து பேசுவதைக் கேட்டதும் அந்தப் புதுப் பெண்ணின் முகத்தில் மெல்லிய புன்னகை பூக்கிறது.

கூடலூர்க் கிழார்.
குறுந்தொகை. 167.

" பிச்சிப் பூ "

ஒரு மாலைப் பொழுது.

மழை பெய்து வெறித்திருக்கிறது.

காட்டில் பிச்சிப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. அந்தப் பிச்சிப் பூ மொட்டுக்கள் நல்ல திரட்சியாக இருக்கிறது. மழை யில் நனைந்த அந்த மொட்டுக்கள் ஈரமாக இருக்கிறது.

ஒரு பூ வியாபாரி அந்தப் பூ மொட்டுக்களைப் பறிக்கிறான். அவன் பனங் குருத்து ஓலையில் முடைந்த ஒரு பூக்கூடை வைத்திருக்கிறான். அந்தப் பூ வியாபாரி அவன் பறித்த அந்த மொட்டுக்களை எல்லாம் பூக் கூடையில் போட்டுக் கொண்டிருக்கிறான். பூக்கூடை நிரம்புகிறது. அவன் பூக்கூடையை மூடுகிறான். அந்தப் பூ வியாபாரி பூக்கூடையைச் சுமந்து கொண்டு, பொடி நடையாய் நடந்து, வீட்டுக்குப் போகிறான்.

அன்று இரவெல்லாம் மழை.

இப்பொழுதுதான் விடிந்திருக்கிறது.

இப்பொழுதுதான் மழையும் வெறித்திருக்கிறது.

அந்தப் பூவியாபாரி அவனுடைய சிறிய வீட்டில் ஒரு ஓலைப்பாயை விரிக்கிறான். அவன் பூக்கூடையில் இருக்கிற பூக்களை எல்லாம் அந்த ஓலைப் பாயில் கொட்டுகிறான். அந்த பிச்சிப் பூ மொட்டுக்கள் எல்லாம் அழகாக பூத்திருக்கிறது.

அந்த இளங்காலைப் பொழுதில் குளிர்ந்த மழைக் காற்றில் அந்தப் பிச்சிப் பூக்கள் மணமாய் மணந்து கொண்டு இருக்கிறது.

சிறைக்குடி ஆந்தையார்.
குறுந்தொகை.168.

" தந்தம் "

ஒரு பாலைவனத்தில் ஒரு ஆண் யானை தனியாக நடந்து போய்க் கொண்டு இருக்கிறது. அந்த ஆண் யானைக்கு இரண்டு அழகான தந்தங்கள் இருக்கிறது. அந்த ஆண் யானை தன்னுடைய தந்தங்களைக் கொண்டு ஒரு பெரிய கல் மலை மேல் குத்துகிறது. அந்த யானையின் இரண்டு தந்தங் களும் உடைந்து விழுகிறது.

வெள்ளி வீதியார்.
குறுந்தொகை. 169.

" நீர் நாய் "

ஒரு பெரிய குளம்.

அந்தப் பெரிய குளத்தில் தண்ணீர் கெத்துக் கெத் தென்று கெட்டிக் கிடக்கிறது.

அந்தப் பெரிய குளத்தில் கரைகள் உயரமாக இருக்கிறது. அகலமாகவும் இருக்கிறது அந்தக் கரைகள். அந்தக் குளத்தில் கரை மண் இறுகி கரைகள் உறுதியாக இருக்கிறது.

ஆழமான அந்தக் குளத்தில் மீன்கள் தண்ணீருக்கு மேலே வந்து விளையாடிக் கொண்டிருக்கின்றன.

ஒரு தாத்தா அந்த மீன்களைப் பிடிப்பதற்காக அந்தப் பெரிய குளத்தில் வலை விரித்து இருக்கிறார்.

மிதப்புக் கட்டைகள் தண்ணீருக்கு மேலே மிதந்து கொண்டிருக்கின்றன.

தாத்தா கண்கள் மிதப்புக் கட்டைகளையே பார்த்துக் கொண்டிருக்கிறது.

தாத்தா கண் எதிரில், வலை, தண்ணீரில் மூழ்கிக் கொண் டிருக்கிறது.

தாத்தா தண்ணீரில் குதிக்கிறார். தாத்தா தண்ணீரில் மூழ்கி வலையைத் தூக்கிக் கொண்டு வருகிறார்.

அவர் ஆசையோடு வலையைப் பார்க்கிறார்.

அவர் வலையில் ஒரு மீன் கூட இல்லை.
அவர் வலையில் அகப்பட்டிருப்பது ஒரு நீர் நாய்.

பூங்கண்ணுத் திரையார்.
குறுந்தொகை.171.

" ஏழு ஊருக்கு ஒரு கொல்லுப் பட்டரை "

எங்கள் ஊரைச் சுற்றி ஏழு ஊர் இருக்கிறது.

அந்த ஏழு ஊர்களிலும் கொல்லுப் பட்டரைகள் இல்லை. ஒரே ஒரு கொல்லுப் பட்டரை எங்கள் ஊரில் இருக்கிறது. இந்த ஒரு கொல்லுப் பட்டரையில்தான் ஏழு ஊர் வேலையும் நடக்கிறது. ஏழு ஊர் வேலையும் ஒரு கொல்லுப் பட்டரையில் நடப்பதால் பெருசாருக்கு துருத்தி.

கச்சிப் பேட்டு நன்நாகையார்.
குறுந்தொகை.172.

" வெடி "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் மழையே இல்லை.

அந்தப் பாலைவனம் வறண்டு இருக்கிறது.

அந்தப் பாலைவனத்தில் ஒரு கள்ளி மரம் இருக்கிறது.

அந்தக் கள்ளி மரத்தில் ஏராளம் முட்கள் இருக்கிறது. அது காய்த்திருக்கிறது. அந்தக் காய்கள் முற்றிக் காய்ந்திருக்கின்றன.

இரண்டு புறாக்கள் அந்தக் கள்ளி மரத்தில் இருக்கிறது. அந்தப் புறாக்களுக்கு, மெத்தென்று மென்மையான இறக்கைகள். அவைகள் கணவனும் மனைவியும்.

ஆண் புறா அதன் மனைவிக்கு ஆசையோடு முத்தம் கொடுக்கிறது. அந்த நேரத்தில் அந்தக் கள்ளி மரத்தில் ஒரு காய் வெடிக்கிறது. அது " படார் " என்று சத்தமாக வெடிக்கிறது.

அந்தப் புறாக்கள் வெடிச்சத்தம் கேட்டதும் பயந்து போய் கணவனும் மனைவியும் பிரிந்து திசைக்கு ஒன்றாகப் பறந்து போய்க் கொண்டிருக்கிறது.

வெண்பூதியார்.
குறுந்தொகை.174.

" தேனீக்கள் "

ஒரு கடல்.

அந்தக் கடலில் பெரிய பெரிய அலைகள் குருத்து மண்ணைக் கொண்டு வந்து கரை நெடுகிலும் திணித்துத் திணித்து வைத்திருக்கிறது.

ஒரு புன்னை மரம், அந்தக் கடல்கரையில் இருக்கிறது. அந்தப் புன்னை மரத்தைக் கடல் அலைகள் நனைத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் புன்னை மரம் பூவாய்ப் பூத்துக் குலுங்கிக் கொண்டு இருக்கிறது.

தேனீக்கள் அந்தப் புன்னை மரத்தில் தேன் சேகரித்துக் கொண்டிருக்கின்றன.

தேனீக்கள் தேன் சேகரித்ததும் தேன் கூட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

எனக்கொரு காதலன் இருக்கிறான். அவன் திருமணச் செலவுக்குப் பணம் சம்பாத்தியம் பண்ண வெளிநாட்டுக்குப் போய் இருக்கிறான். பணம் சம்பாத்தியம் பண்ணியதும் அவன் என்னிடம் திரும்பி வருவான். தேன் சேகரித்ததும் தேனீக்கள் தேன் கூட்டுக்குத் திரும்பி வருவதைப் போல்.

உலோச்சனார்.
குறுந்தொகை.175.

" கலங்கிய நெஞ்சம் "

ஒரு ஆறு.

அந்த ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு வந்து கொண்டிருக்கிறது. மேற்கே, வேறு நாட்டில் பெய்த பெரிய மழை, வெகு தொலைவில் இருந்து வெள்ளம் கலங்கி வந்து கொண்டு இருக்கிறது.

ஒரு பெண் அந்த ஆற்றங்கரையில் உட்கார்ந்திருக் கிறாள். அந்த இளம்பெண் ஆற்றில் கலங்கி வருகிற அந்தப் பெரிய வெள்ளத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

அந்த இளம் பெண்ணிடம் ஒரு இளைஞன் முதல் முதலாக ஒரு நாள் வந்தான்.

அவன் திரும்பவும் ஒரு நாள் இரண்டாவது தடவை யாக அவளிடம் வந்தான்.

அந்த இளைஞன் அவளிடம் திரும்பத் திரும்பப் பல நாள் வந்தான்.

அந்த இளைஞன் அவளிடம் பாசத்தோடு பழகி னான். அந்த இளைஞன் அவளிடம் சிரித்துச் சிரித்துப் பேசி னான்.

அந்த இளம்பெண் அவன் பேச்சில் மயங்கினாள். அவனிடம் மனதைப் பறி கொடுத்தாள்.

அவன் இப்போது இவளிடம் வருவதேயில்லை.

அவன் எங்கே இருக்கிறான் என்றே தெரிய வில்லை. அவனிடம் மனதைப் பறிகொடுத்த இவள் நெஞ்சம் ஆற்று வெள்ளத்தைப் போல் கலங்கி இருக்கிறது.

வருமுலையாரித்தியார்.
குறுந்தொகை.176.

" பெலக்குறைவு "

ஒரு இளைஞன்.

அவன் ஒரு பெண்ணைக் காதலித்தான்.

அவளிடம் பேசும்போது அவன் நெஞ்சு நடுங்கியது.

காதலித்தவளையே அவன் திருமணம் செய்து கொண்டான்.

திருமணத்திற்குப் பிறகு, அவன், மனைவியின் மார்பில் தலை வைத்துப் படுத்திருக்கிறான். இப்போதும் அவன் நெஞ்சு நடுங்குவதை நிறுத்தவில்லை.

நெடும்பள்ளியத்தையார்.
குறுந்தொகை.178.

" தாகம் "

ஒரு ஊரணி.

அந்த ஊரணியில் தண்ணீர் கெத்துக் கெத்தென்று கெட்டிக் கிடக்கிறது. அந்தத் தண்ணீர் தெளிந்து கிடக்கிறது. அது நல்ல தண்ணீர். அயிரை மீன்கள் அந்த ஊரணியில் நீச்சல் அடித்துக் கொண்டிருக்கிறது. ஆம்பல் பூக்கள் அந்தத் தண்ணீருக்கு மேலே அழகாகப் பூத்துக் கொண்டு இருக்கிறது. ஒரு இளைஞன் அந்தப் பூக்களைப் பறித்துக் கொண்டிருக்கிறான்.

அவனுக்குத் தண்ணீர் தாகம் எடுக்கிறது.

குடிப்பதற்கு அந்த ஊரணி நிறையாத் தண்ணீர் இருந்தும் அவன் தண்ணித் தாகத்தோடு பூப்பறித்துக் கொண்டுஇருக்கிறான்.

நெடும்பள்ளியத்தையார்.
குறுந்தொகை.178.

" மலை உச்சியில் இருக்கிறது எங்கள் ஊர் "

ஒரு பெரிய காடு.

அது "ஓ.." என்று இரைச்சல் போட்டுக் கொண்டு இருக்கிறது.

அந்தப் பெரிய காட்டில் மூங்கில் மரங்கள் உயரமாக வளர்ந்திருந்தன. ஒரு மூங்கில் மரம் அதன் தலைக்கு மேலே இருந்த ஒரு பெரிய தேன் கூட்டைக் குத்திக் கொண்டு இருந்தது. உயரமான அந்த மூங்கில் மரங்களை யானை மேய்ந்து விட்டது. அந்த மூங்கில் மரங்கள் குட்டையாக நின்று கொண்டிருக்கிறது.

ஒரு இளைஞன் அந்தக் காட்டில் வேட்டையாட வந்திருக்கிறான். அவன் புதர்களில் பதுங்கி இருக்கிற முயல்களைக் கலைக்கிறான். அவனுடைய வேட்டை நாய்கள் அவனோடு சேர்ந்து வேட்டையாடிக் கொண்டு இருக்கிறது.

அந்த இளைஞனை அவன் காதலி சந்திக்கிறாள்.

காதலனிடம் அந்தப் பெண் சொல்கிறாள்..

"பொழுது அடைந்து விட்டது. "

"உன் வேட்டை நாய்களும் உன்னோடு சேர்ந்து வேட்டையாடிக் களைத்து விட்டன.."

"அதோ "

"நமக்கு முன்னால் தெரிகிறது பார்..ஒரு மலை..அந்த மலை உச்சியில் அந்த மலையின் நடு மத்தியில் இருக்கிறது எங்கள் ஊர்.."

"இந்த இருட்டில் நீ உன் ஊருக்குப் போக வேண்டாம்.."

"நீ என்னோடு வா.."

"நீ..இன்று இரவு எங்கள் வீட்டில் தங்கு.."

குட்டுவன் கண்ணனார்.
குறுந்தொகை.179.

"பாசம்"

ஒரு பெரிய பாலைவனம்.

வெயில் கொளுத்துகிறது.

அந்தப் பெரிய பாலைவனத்தில் கொளுத்துகிற வெயிலில் ஒரு மான் குட்டி இரை கடித்துக் கொண்டிருக்கிறது.

அந்த மான் குட்டியின் அப்பா ஒரு மரத்தின் மேல் தன் முன்னத்திக் கால்களை எக்கிப் போட்டு எக்கிப் போட்டு கிளைகளைத் தாழ்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது. தாழ்ந்த அந்தக் கிளை ஒடிகிறது. ஒடிந்த அந்த மரக்கிளையை அந்த ஆண் மான் தன் காலால் உதைத்து உதைத்துப் பட்டைகளை சிதைத்துக் கொண்டிருக்கிறது.

அந்த ஆண் மானுக்கு வயதாகி விட்டது. அந்த ஆண் மானின் தலையில் கொம்புகள் கிளை கிளையாக வளர்ந்து முற்றி இருக்கின்றன.

மான் குட்டி சிதைத்த பட்டையைக் கடித்துக் கொண்டு இருக்கிறது.

தங்கள் குட்டி பசியாறுவதை அப்பாவும், அம்மாவும் பாசத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

"குட்டி திங்கட்டும்..குட்டி தின்னது போக மிச்சம் இருந்தால் திங்கலாம்.." என்று தாயும், தந்தையும் பொறுத்திருக்கிறார்கள்.

அந்தப் பாலைவனத்தில் வெயில் கொல்லு கொல்லென்று கொல்லுகிறது.

தாய் மான் அந்தக் கடுமையான வெயிலில் நின்று கொண்டிருக்கிறது. அதன் காலடியில் விழுந்து கிடக்கிற சிறிய நிழலில் அந்த மான் குட்டி நின்று கொண்டிருக்கிறது.

கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்.
குறுந்தொகை.213.

" பசு "

ஒரு பெரிய தோட்டம். அந்தப் பெரிய தோட் டத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அந்தப் பெரிய கிணற்றில் தண்ணீர் கெத்து கெத்தென்று கெடக்கு.

அழகான ஒரு பசு அந்தக் கிணற்றில் தவறி விழுந்து இருக்கிறது. அது வெளியே வர முடியாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறது.

அது ஒரு இரவு நேரம்.

கிணற்றில் விழுந்து கிடக்கிற பசு வெளியே வர முடியாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதை ஒரு மனிதன் பார்க்கிறான். அவன் அந்தப் பசு படுகிற துன்பத்தைக் கண்டு மன வேதனைப்படுகிறான். அவனால் அந்தப் பசு படு கிற துன்பத்தை வேறு யாரிடத்திலும் சொல்ல முடியவில்லை. அவன் பிறவியிலேயே வாய் பேச முடியாத ஊமை.

கூவன் மைந்தனார்.
குறுந்தொகை. 224.

" அலை "

ஒரு சிறிய கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில் ஒரு சிறிய வீடு இருக்கிறது.

அந்தச் சிறிய வீட்டின் முன் முற்றத்துக்கு முன்னால் ஒரு பெரிய கடல் இருக்கிறது.

அந்தக் கடல் கரையில் அழகான ஒரு நந்தவனம் இருக் கிறது. அந்த நந்தவனத்தில் விழுதுகள் உறங்குகிற தாழை மரங்கள் இருக்கின்றன. அழகான அன்னப் பறவைகள் அந்தத் தாழை மரங்களில் உட்கார்ந்து இருக் கின்றன. அந்த அன்னப் பறவைகள் தங்களின் அலகால் றெக்கைகளைக் கோதிக் கொண்டு இருக்கின்றன.

அந்தச் சிறிய கிராமத்தில் அந்தச் சிறிய வீட்டில் அழகான ஒரு பெண் இருக்கிறாள். அவள் ஒருத்தனைக் காதலிக்கிறாள். அவள் காதலன் வெகு தொலைவில் உள்ள வேறு ஒரு தேசத் தில் இருக்கிறான்.

அந்தப் பெண்ணின் காதலனுடைய தேசத்திலும் ஒரு கடல் இருக்கிறது. அந்தக் கடலில் எழும்புகிற அலைகள் அந்தப் பெண்ணின் வீட்டுக்கு முன்னால் இருக்கிற அந்தப் பெரிய கடலுக்கு வருகிறது. அந்தப் பெண் அந்த அலை களைப் பார்க்கும் போது அவள் காதலனை நேரில்

பார்த்ததைப் போல் கண்டு மகிழ்ச்சி அடைகிறாள்.

செய்தி வள்ளுவன் பெருஞ் சாத்தனார்.
குறுந்தொகை. 228.

" ஊழ் "

ஒரு பெரீய பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில்.. அது நடுமத்தி,

ஒரு காதல் ஜோடி நடந்து போய்க் கொண்டு இருக்கிறது. தெற்கே இருந்து வடக்காமல் அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தாத்தாவும், ஒரு பாட்டியும், வடக்கேயிருந்து தெற்காமல், அந்த காதல் ஜோடிக்கு எதிரே வந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அந்த இளம் காதல் ஜோடியைக் கூர்ந்து பார்க்கிறார்கள். தாத்தாவும், பாட்டியும் அந்த இளம் காதல் ஜோடி இன்னார் இன்னாருடைய பிள்ளைகள் என்று அவர்கள் அடையாளம் தெரிந்து கொள்கிறார்கள்.

பாட்டி சொல்கிறாள்..

இந்தப் பெண் சிறுமியாக இருந்த போது இவள் தலை முடியை ஐந்து பகுதியாகப் பிரித்து அழகாகப் பின்னி சடை போட்டிருக்கும்.

இந்தப் பையன் சிறுவனாக இருந்த போது இவள் சடை முடியைப் பிடித்து இழுத்து சண்டை போடுவான்..

இவள், இவன் தலைமுடியைப் பிடித்து இழுப்பதற்காக இவனை முடுக்கிக் கொண்டு ஓடுவாள்.

காரணமே இல்லாமல் இவர்கள் ரெண்டு பேரும்

எப்போதும் சண்டை போட்டுக் கொண்டு இருப்பார்கள்.

இவர்களை வளர்க்கிற செவிலித் தாயார்கள் இவர்கள் போடுகிற சண்டையை விலக்குப் பிடித்துக் கொண்டு இருப்பார்கள். இந்தச் செவிலித் தாயார்களால் இவர்கள் சண்டையை ஒரு நாளும் தீர் த்து வைக்க முடிந்தது இல்லை.

இவர்கள் வளர்ந்து பருவ வயதிற்கு வந்த இப்போது காதல் இவர்களைச் சேர்த்து வைத்திருக்கிறது. பெற்றோர் களுக்குத் தெரியாமல் இவர்கள் கண்காணாத தேசத்திற்குப் போய்க் கொண்டு இருக்கிறார்கள்.

ஊழ் வினை இவர்களிடம் எப்படி விளையாடி இருக் கிறது..?

மோதாசனார்.
குறுந்தொகை. 229.

" பாவி "

ஒரு ஆறு.

இந்த ஆறு மேற்கே இருந்து கிழக்காமல் நீளமாய் நீண்டு கிடக்கிறது.

ஒரு இளம் பெண் அந்த ஆற்றில் குளித்துக் கொண் டிருக்கிறாள்.

ஒரு மாம்பழம் தண்ணீரில் மிதந்து மிதந்து மேற்கே இருந்து கிழக்காமல் வந்து கொண்டு இருக்கிறது. தண்ணீரில் மிதந்து மிதந்து வந்த அந்த மாம்பழம், ஆற்றில் குளித்துக் கொண்டு இருந்த அந்த இளம் பெண்மேல் மோதி அந்த மாம் பழம் அவளுக்குப் பக்கத்தில் மணந்து கொண்டு இருக்கிறது.

அந்த மாம்பழம் புதுசா இருக்கு. அது மணந்து கெடக்கு. அந்த மாம்பழத்தைத் திங்கணும் போல அவளுக்கு ஆசை ஏற்படுகிறது.

அவள் அந்த மாம்பழத்தை எடுக்கிறாள். அவள் கன்னங்களில் வைத்து அதை உருட்டுகிறாள். மோந்து பார்க்கிறாள். கடிக்கிறாள்.

திங்கத் திங்க ருசியாக இருக்கிறது அந்த மாம்பழம். அழகான அந்த இளம் பெண் ஆசையோடு அந்த மாம்பழத்தை ரசித்துத் தின்று கொண்டிருக்கிறாள்.

அங்கே காவலுக்கு நின்று கொண்டிருந்த இராணுவ

வீரர்கள் அந்த இளம் பெண் மாம்பழம் தின்பதைப் பார்க்கிறார்கள்.

இந்த மாம்பழம் அரசனுக்குச் சொந்தமான ஒரு பெரிய மாந்தோப்பில் இருந்து ஆற்றில் விழுந்தது. இந்த மாம்பழம் அரசனுக்குச் சொந்தமானது.

இராணுவ வீரர்கள்,அந்த இளம் பெண்ணைக் கைது செய்கிறார்கள். அவர்கள் அவளை அரசன் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்.

அரசன் அந்த இளம் பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கிறான்.

அந்த இளம் பெண்ணின் தந்தை தன் மகள் செய்த தப்பை மன்னித்து தன் பெண்ணுக்கு உயிர்ப் பிச்சைக் கேட்டு அரசனிடம் மன்றாடுகிறார்.

"அரசே.." என் மகள் செய்த தப்புக்கு தெண்டமாக அவள் எடைக்கு எடை தங்கத்தில் சிலை செய்து தருகிறோம்..

"அரசே.." என் மகள் செய்த தப்புக்கு தெண்டமாக அரசர்க்கு நாங்கள் எண்பத்தி ஒரு ஆண் யானைகளும் தருகிறோம்.

"அரசே.." எங்கள் மகள் செய்த தப்பை மன்னித்து எங்கள் மகளை எங்களிடம் உயிரோடு திருப்பிக் கொடுங்கள்."

அரசன் மனம் இரங்கவே இல்லை.

அரசன் அழகான அந்த இளம் பெண்ணை வாளால் வெட்டிக் கொன்று விட்டான்.

பரணர்.
குறுந்தொகை.292.

" பசி "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் வானம் செக்கச் செவே ரென்று சிவந்திருக்கிறது.

நிலவு தோன்ற இன்னும் நேரம் இருக்கிறது.

ஒரு பெரிய ஆண் யானை தன் இளம் மனைவி யோடு வேகமாக வந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெண் யானைக்கு அகோரமான பசி. அந்தப் பெண் யானை பசியில் கிறுகிறுத்து நடக்க முடியாமல் கால் ஓய்ந்து திணறித் திணறி நடந்து வந்து கொண்டிருக்கிறது.

அவைகளுக்கு எதிரில் ஒரு "யா " மரம் இருக்கிறது. அந்த ஆண் யானை தன் தந்தங்களால் அந்த "யா" மரத்தின் பட்டைகளைக் குத்திக் கிழிக்கிறது. அந்த ஆண் யானை அந்தப் பட்டைகளை வாயில் வைத்துச் சவைக்கிறது.

அந்த ஆண் யானையால் அந்தப் பட்டைகளைத் திங்க முடியவில்லை. அந்தப் பட்டையில் ஈரம் இல்லை, ருசியில்லை. அந்தப் பட்டைகள் காய்ந்து, இற்று, சக்கையாக இருக்கிறது.

அந்த ஆண் யானை தன் கையில் இருந்த அந்த மரப்பட் டையை கோவத்தில் வீசி எறிகிறது.

அந்தப் பெரிய ஆண் யானை தன் மனைவியின்

பசிக்கு நல்ல இரை கொடுத்து மனைவியைப் பசியாற்ற முடியாத துயரத்தில் அது வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு தன் இயலாமையை நினைத்து " ஒ " என்று அழுகிறது.

கடம்பனூர்ச் சாண்டிலியனார்.
குறுந்தொகை.307.

" காவல்காரன் "

ஒரு பெரிய பலா தோட்டம்.

பலா மரங்களில் காய்கள் பெருசு பெருசாகக் காய்த்துத் தொங்கிக் கொண்டு இருக்கிறது. பழுத்த பழங்கள் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன.

ஒரு காவல்காரன் அந்தப் பெரிய பலா தோட்டத்தைக் காவல் காத்துக் கொண்டிருக்கிறான்.

ஒரு பகல்.

ஒரு பலா மரத்தடியில் அந்த காவல்காரன் கண்களை மூடிப்படுத்திருக்கிறான். அவன் அசந்து உறங்கிக் கொண்டிருக்கிறான்.

ஒரு பெரிய ஆண் குரங்கு காவல்காரன் மரத்தடியில் படுத்திருப்பதைப் பார்க்கிறது. காவல்காரன் நன்றாக உறங்குகிறான் என்பதையும் அது தெரிந்து கொள்கிறது. அந்தப் பெரிய ஆண் குரங்கு ஒரு பெரிய பலா மரத்தில் உட்கார்ந்திருக்கிறது. அந்த ஆண் குரங்கு அந்தப் பெரிய பலா மரத்தில் பழுத்து தொங்குகிற ஒரு பெரிய பலாப்பழத்தில் கையை விட்டு குடைந்து குடைந்து சுளைகளை அள்ளி அள்ளி விழுங்கிக் கொண்டிருக்கிறது.

காவல்காரனுக்கு முழிப்பு தட்டுகிறது. அவன் எழுந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கிறான்.

ஒரு பெரிய ஆண் குரங்கு ஒரு பெரிய பலாப் பழத்தைத் தின்று கொண்டிருக்கிறது.

காவல்காரன் யோசனை செய்கிறான்.

பலாப்பழத்தைத் தின்று மகசூலை நாசம் பண்ணுகிற இந்தப் பெரிய ஆண் குரங்கைப் பிடிக்க வேண்டும் என்று அவன் முடிவு செய்கிறான்.

மறுநாள்.

அந்தக் காவல்காரன் அந்தப் பெரிய ஆண் குரங்கைப் பிடிப்பதற்கு. அந்தத் தோட்டத்திலுள்ள எல்லாப் பலா மரங்களிலும் வலைகளைக் கெட்டிக் கொண்டிருக்கிறான்.

காவிரிப்பூம் பட்டணத்து கந்தரத்தனார்.
குறுந்தொகை.342.

"கட்டில்"

ஒரு இரவு நேரம்.

நிலவு அழகாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

அது ஒரு பெரிய நகரம்.

அந்தப் பெரிய நகரத்தில் ஒரு பெரிய அரண்மனை.

அரண்மனையில் ஒரு பெரிய உள்முற்றம்,

அங்கே ஒரு கட்டில் இருக்கிறது. அந்தக் கட்டிலுக்குக் குட்டக் குட்டக் கால்கள். அந்தக் கட்டில் கொள்ளாமல் பூக்கள் ஏராளமாக விரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அழகான அந்தப் பூக்கள் மணம் வீசிக் கொண்டிருக்கிறது.

அந்தக் கட்டிலில் ஒரு குழந்தை படுத்திருக்கிறது.

குழந்தையின் அப்பா வெளியே இருந்து அப்பொழுது தான் வீட்டுக்கு வருகிறான். அவன் வீட்டுக்கு வந்ததும் அந்தக் கட்டிலில் போய்ப் படுத்துக் கொள்கிறான். பெரு மூச்சு விடுகிறான். அவன் தன் குழந்தையைத் தன் மார் போடு சேர்த்து அணைத்துக் கொண்டு படுத்திருக்கிறான்.

அவன் மனைவியும் போய்ப் படுக்கிறாள். அவள் தன் கணவனின் முதுகில் தன் நெஞ்சைச் சேர்த்துக் கொண்டு படுத்திருக்கிறாள்.

என்ன ஒரு பண்பு,
என்ன ஒரு அழகு.

பேயனார்.
குறுந்தொகை.359.

" பட்டமரம் "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் ஒரு ஒத்தையடிப் பாதை.

அந்தப் பாதை நெடுகிலும் மரங்கள் வரிசையாக நிற்கின்றன.

ஒரு யானை அங்கே வேகமாக வந்து கொண்டிருக் கிறது.

அது ஒரு பெரிய ஆண் யானை.

அந்த யானை ஒரு பெரிய மரத்தில் ஒரு கிளையை ஒடிக்கிறது. அந்தக் கிளை ஒடியவில்லை.

அந்தப் பெரிய யானையால் அந்த மரத்தில் ஒரு கிளையைக் கூட ஒடிக்க முடியவில்லை.

அது பட்டமரம்.

அங்கே வரிசையாக நின்று கொண்டிருக்கிற எல்லா மரங்களும் பட்ட மரங்கள்தான்.

அந்த யானை தாகத்தோடு இருக்கிறது, பசியோடு இருக்கிறது. அது களைத்துப் போய் இருக்கிறது.. பெலம் குறைந்து போய் இருக்கிறது.

அந்தப் பெரிய யானை அது தன் நீளமான தும்பிக்

கையைச் சுருட்டி வைத்துக் கொண்டு வருத்தத் தோடு நின்று கொண்டு இருக்கிறது.

ஔவையார்.
குறுந்தொகை.388.

" மேகங்கள் முழங்குகிறது "

ஒரு மலை அடிவாரம்.

வெயில் கொளுத்தோ கொளுத்துன்னு கொளுத்திக் கொண்டு இருக்கிறது.

அந்த மலை அடிவாரத்தில் உள்ள மூங்கில் மரங்கள் எல்லாம் காய்ந்து பட்டுப்போய் நிற்கின்றன.

அந்த மலை அடிவாரத்தில் ஒரு "ஓமை" மரம் இருக் கிறது.

ஒரு பெரிய ஆண் யானை தண்ணீர்த் தாகத்தோடு அந்த ஓமை மரத்திற்கு ஓடி ஓடி வருகிறது. அந்த ஓமை மரத்தின் பட்டைகளை தன்னுடைய கூர்மையான தந்தங் களால் குத்திக் குத்திக் கிழிக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை அந்த ஓமை மரத்தில் குத்திக் குத்திக் கிழித்த, அந்த ஓமை மரத்தின் பட்டைகளில் , தண்ணீரே இல்லை. அந்த ஓமை மரத்தின் பட்டைகள் காய்ந்து, ஈரப்பதம் இல்லாமல் வறண்டு போய் இருக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை தன் தாகத்திற்குத் தண்ணீர் கிடைக்காமல் வருத்தத்தோடு அங்கே நின்று கொண்டு இருக்கிறது.

மழை மேகங்கள் அந்தப் பெரிய மலைக் காட்டுக்கு வெகு தொலைவில் ஆரவாரத்தோடு முழங்கிக் கொண்டு

இருக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை, மழை மேகங்கள் ஆரவாரமாக முழங்கிக் கொண்டு இருக்கிற பெரிய சத்தத்தை அது காது கொடுத்துக் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறது.

கயமனார்.
குறுந்தொகை. 396.

நன்றி..!

கல்யாணி சுயம்புலிங்கம்.

M. S. ரிஷி அவர்கள்.

S. செல்வம் அவர்கள்,

லட்சுமி பிரியா செல்வம் அவர்கள்,

S. கணேஷ் குமார் அவர்கள்

நாகஜோதி கணேஷ் குமார் அவர்கள்,

S. தவயோக ராஜன் அவர்கள்,

பேபி S. சஹானா

பேபி G. மோனிகா

குறுந்தொகை கதைகள் எழுபத்தைந்து.

பாசத்துடன்

மு. சுயம்புலிங்கம்.